Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1283)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 23 திங்கட்கிழமை (06.02.2012) பக்கங்கள் 16 ஓசை - 128


கபடிக்கு தெரிவு (11)


தள்ளுபடி (12)


வாழ முடியாது (13)


எப்படி... (14)

## யாழ். பட்டதாரிகளுக்கு விரைவில் வேலைவாய்ப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாண பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவையின் (15ஆம் பக்கம் பார்க்க)

# வட மாகாண அபிவிருத்தி ஜனாதிபதி நேரில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கு நேற்றைய தினம் வருகை தந்த ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இன்றைய தினம் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ள மீள்மதிப்பீட்டுக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயவுள்ளார்.

நேற்று மாலை ஐந்து மணியளவில் குடாநாட்டுக்கு வருகை தந்த ஜனாதிபதி, இன்று காலை பத்து மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நோயாளர் விடுதிகளை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். இதன்பின்னர், 11.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை திறந்து வைக்கவுள்ளார். இதனையடுத்து நண்பகல் 12.00 மணி முதல் யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ள வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி சம்பந்தமான மதிப்பீட்டுக் குழுக்கூட்டத்தில் பங்குகொள்ளவுள்ளார். ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு வடமாகாணத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், ஆளுநர், அரச அதிபர்கள் மற்றும் அரச (15ஆம் பக்கம் பார்க்க)



## பிரிட்டனில் மாயம்

(லண்டன்)



பிரித்தானியாவில் 31 வயதான தமிழ்ப் பெண் ஒருவர் காணாமற்போயுள்ளார். குளோ சிஸ்டர், கொனி ஹில் பகுதியில் வசித்து வந்த, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கோகுலவதனி மயூரன் என்ற பெண் கடந்த ஜனவரி 31 ஆம் திகதி தொடக்கம் காணாமற்போயுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரித்து வரும் பிரித்தானிய பொலிஸார், அவரைக் கொலை செய்திருக்கலாம் என்ற (15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் நிகழ்வுக்குச் செல்வதா? கூட்டமைப்புக்குள் கருத்து மோதல்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக்கு வருகை தந்த ஜனாதிபதி இன்றைய தினம் வட மாகாண அபிவிருத்தி தொடர்பாக யாழ்.செயலகத்தில் நடத்தவுள்ள மதிப்பீட்டுக் கலந்துரையாடலில் பங்குபற்றுவதா? அல்லது பங்குபற்றாமல் விடுவதா? என்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் மீள்மதிப்பீட்டுக் கலந்துரையாடலில் பங்குபெற வேண்டும். பாரிய அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் வடபகுதியில் முன்னெடுக்கும்போது அதில் கலந்து (15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலை வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விளக்கம்



(யாழ்ப்பாணம்)

பல்வேறு நாடுகளிலிருந்தும் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரதிநிதிகளுக்கு குடாநாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ தேவானந்தா விரிவாக விளக்கியுள்ளார்.

40 இற்கும் அதிகமான நாடுகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள 50 இற்கும் அதிகமான பிரதிநிதிகள் நேற்றைய தினம் யாழ் மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் (15ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கு அரசியல் தீர்வை முன்வையுங்கள்

## அரசைக் கோருகிறார் சம்பந்தன்

(திருகோணமலை)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டுமெனில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ன என்பது குறித்து தம்மிடம் தெரிவிக்க வேண்டுமென கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உப தலைவர்களுக்கென திருகோணமலையில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற பயிற்சி செயலமர்வின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

தெரிவுக்குழுவிற்கு நாம் வந்தால் நீங்கள் நீதி நியாயம் செய்வீர்களா? கடந்த ஒரு வருடகாலமாக அரசாங்கத்துடன் நாம் பேசி வந்துள்ளோம். எதை அடைந்தோம்? நாங்கள் நிதானமாக, விசுவாசமாக நடக்கவில்லையா? எவ்விதமான அரசியல் தீர்வு அவசியம் என்பதை நாம் தெளிவாக எழுத்தில் தெரிவிக்கவில்லையா? நாம் பிரிவினை கேட்கவில்லை. மக்களுடைய உரிமைகளையே கேட்கின்றோம். எமது மக்களுக்கு போதிய சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்றே கேட்கின்றோம்.

கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றவில்லை எனக் குறை கூறுகிறார்கள். (15ஆம் பக்கம் பார்க்க)

## அதிக வட்டி கடன் அரசே காரணம்

### கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு ஒப்பீடாக ரூபாயின் பெறுமதி சுயாதீனமான முறையில் தீர்மானிக்கப்படாவிட்டால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ (15ஆம் பக்கம் பார்க்க)

**கடற்புலிகளின் தளபதி சூசையின் மனைவியின் விசேட நேர்காணல் உள்ளே...**



## ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சியில் ஹிருனிகா இணையத் தீர்மானம்

தந்தையின் வழியை பின்பற்றி ஸ்ரீலங்கா மகாஜன கட்சியூடாக அரசியலில் பிரவேசிக்க தாம் தீர்மானித்துள்ளதாக காலஞ்சென்ற பாரத லக்ஷ்மன் பிறேமசந்திரவின் மகள் ஹிருனிகா பிறேமசந்திர தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் ஸ்ரீலங்கா மகாஜன கட்சியின் 28 ஆவது வருடாந்த கூட்டத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நாள் தமது அரசியல் வாழ்க்கையின் முக்கியமானதொரு தினமாகும் என ஹிருனிகா பிறேமசந்திர தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சி எனும் ஒப்பற்ற பெரும் விருட்சத்தில் தாமும் இணைந்து கொள்ளவுள்ளமையே இதற்கு காரணம் என அவர் விடுத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சவேந்திர சில்வாவின் பதவியை ஐ.நா.செயலரும் அகற்ற முடியாது


(கொழும்பு)



ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் நடவடிக்கைகளின் ஆலோசகராக் நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை, அந்த பதவியில் இருந்து செயலாளர் நாயகம் பான் கி மூனினால் கூட அகற்ற முடியாது என ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இன்ரர் சிற்றி பிரசினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார். ஆசிய நாடுகளினால் இந்தப் (15ஆம் பக்கம் பார்க்க)

# புத்தெழில் பெறும் மத்தியம்





ஆங்கிலேயர்கள் குடியேற்றவாத நாடுகளில் நிறுவிய மிஷனறிப் பாடசாலைகளில், இலங்கையிற் குறிப்பாக வட பகுதியில் அமைக்கப்பெற்ற உவெஸ்லியன் மிஷன் ஆங்கிலக்கல்லூரி எனப் பெயர்பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதன்மையானதாகும். பீற்றர்பேர்சிவல் அடிகளாரால் மத்திய பாடசாலை எனவும் பெயர் சூட்டப்பெற்ற இக்கல்லூரி அதே கொள்கையை இன்றளவும் கடைப்பிடித்து வருகின்றது. வட மாகாணத்திற்குப் பல முதலாவதுகளை அறிமுகம் செய்துவரும் இக்கல்லூரி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் பழைய மாணவருமான கௌரவ அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின புதல்வரும், இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவருமான நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் நெறிப்படுத்தலில புத்தெழிலும், புதுப்பொலிவும் பெற்று வருகின்றது.

**நாக. தமிழிந்திரன்**
**(ஆசிரியர்)**

மாணவர்களின் சமநிலை ஆளுமை விருத்தியிற் கல்வியையும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும் சமமாகக் கருதும் இப்பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை வைப வரீதியாக திறந்து வைக்க மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வருகிறார். இந்நிகழ்வு வரலாற்று முக்கியத்துவ முடையதாகும்.

யாழ்ப்பாணத்திற்கு, முன்னோடியாக விளங்கிய பெருமை அன்றிலிருந்து இன்று வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கே உரித்தாகும். அந்த வரலாற்றுப் பாதையின் மைல்கல்லாக அமைந்தவர் கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தான்.

அந்தவகையில் 1881 இல் அதிவண. பிரட்றிக் வெப்ஸ்ரர் யாழ்ப்பாணத்திற்குத் துடுப்பாட்டத்தை அறிமுகம் செய்து வைத்தார். 1894 இல் வண. கபிரியேல் லீஸ் அவர்கள் உதைபந்தாட்டத்தை அறிமுகம் செய்துவைத்தார்.

2012.02.06 இல் பழைய மாணவர்களின் தலைவரான கௌரவ அமைச்சர் மாண்புமிகு கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பிரசன்னத்துடன் நீச்சல் தடாகத்தை அறிமுகம் செய்து வைக்கின்றார்.

நாட்டிற்கு தலை சிறந்த புதல்வர்களை நல்கிய பாடசாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்பதற்கு 19 ஆம் நூற்றாண்டின் விடிவெள்ளியான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரையும், 21 ஆம் நூற்றாண்டின் விடிவெள்ளியான கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும், மத்திய கல்லூரி புதல்வா களாகப் பெற்றமையே சான்றாகும்.

நாவலர் சைவத்திற்கும், தமிழுக்குமாக உழைத்தவர். ஆனால் கௌரவ அமைச்சர் அவர்கள் ஒருபடி மேலே சென்று வீபூதி அணியாத இந்துவாக, சிலுவை தரிக்காத கிறிஸ்தவராக, குல்லா அணியாத இஸ்லாமியராக (அவரது வார்த்தைகளில்) இன, மத, மொழி பேதமற்று நாட்டின் தேசிய மறுமலர்ச்சிக்காகவும், சுபீட்சத்திற்காகவும், பாடுபடுபவராக விளங்குகின்றார் என்பது குறிப பிடத்தக்கது.

விளையாட்டுத் துறையில் முத்திரை பதித்த புத்திரர்களில், 1952 இல் நா.எதிர் வீரசிங்கம் ஏசியன் ஒலிம்பிக்போட்டியில் ஒரேயொரு இலங்கை மாணவராகப் போட்டியிட்டு உயரம் பாய்தலில் ஈட்டிய சாதனையும் சான்றாகும்.

கல்விப்புலத்திலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சளைத்தது அல்ல என்பதற்கு 1867 இல் ஒக்ஸ்போர்ட், கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத் தேர்வில் இடம்பெற்ற 100 இலங்கை மாணவர்களில் 22 பேர் மத்தியின் புதல்வர்கள் என்பதும், அதேயாண்டில் மெட்ரிகுலேசன் பரீட்சையில் வட மாகாணத்திலிருந்து தோற்றிய 8 மாணவர்களில் 4 பேர் இக்கல்லூரி வாரிசுகள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.





கொடிய .யுத்தத்தின் கோரப்பிடியிற் சிக்கிச் சின்னபின்னமான பாடசாலை 1994 இல் தேசிய தரம் உயர்த்தப்பட்டது. துடுப்பாட்டத்திலும், வீறுநடை போட்டது. 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தின் பின் முழுநேர (24 hours) அதிபர் சேவையைப் பெற்று, மீண்டும் தொடங்கும் மிடுக்கு என முன்னணி வகித்து, 1994 இல் 4 மாணவர்கள் வர்த்தகத்துறையில் 4 A சித்திபெற்றமையும், அவர்களில் ஒருவர் தேசியமட்ட 1 ஆம் இடம்பெற்றமையும், 1999 இல் கணிதப் பிரிவில் மாவட்டமட்ட 1 ஆம் இடமும், 2000 இல் கலைப்பிரிவு 1 ஆம் இடமும் பெற்றமையும் இதற்குச் சான்றுகளாகும்.

வறிய மாணவர்களும் உயர்கல்வி பெறவும், சமரசமாகக் கற்கும் இப்பாடசாலை என்றும் சமூகத்திற்காகத் திறந்துள்ளது. 1998 இல் கௌரவ அமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட மகேஸ்வரி கணினி வளநிலையம் இதற்கு மற்றொரு சான்றாகும்.

வடமாகாணத்தின் சிறந்த பௌதீகக் கட்டமைப்பும், கவின் நிலையும் கொண்ட பாடசாலையாக இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் விருதுவழங்கிக் கௌரவிக்கப்பட்ட இப்பாடசாலை, தமிழ்மொழித்தினப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் தனியிசை, குழுஇசை, நடனம், பேச்சு, விவாதப்போட்டிகளில் முதலிடம் பெற்ற பாடசாலையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1927 இல் மகாத்மாகாந்தியின் கால் பதித்த கலாயோகி ஆனந்த குமாரசுவாமி வருகைதந்த பூமியாகும். தற்போது அதிமேதகு ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களின் வருகை மேலுமொருபடி மெருகு பெறுகின்றது.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற சமதர்ம நோக்குடன் அன்றும், இன்றும், இனியும் இயங்கும் இக்கல்லூரி, கல்லூரியின் புதிய அதிபர் சி.க.எழில் வேந்தன் அவர்கள் தலைமையில், கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேரடி நெறிபடுத்தலில், அதிமேதகு ஜனாதிபதி அவர்களின பிரசன்னத்தில் புதுப்பொலிவும், புத்தெழிலும் பெறுகிறது.

## சிங்கள மொழி செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் 2 ஆம் மொழியாகத் தரம் 6 இல் சிங்கள மொழிப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான செயலமர்வு நடைபெறவுள்ளதாக வலிகாமம் கல்விவலயப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

உடுவில், தெல்லிப்பளைக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களிற்கான இச் செயலமர்வு, 18 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களிற்கான இச் செயலமர்வு 19 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை மானிப்பாய் ஆசிரியர்வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. கருத்தரங்கிற்குச் சிங்களம் கற்பிக்கும் இரு ஆசிரியர்களை அனுப்பி வைக்கும்படி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (06)

## நிர்வாகிகள் தெரிவு

வரையறுக்கப்பட்ட முல்லைத்தீவு முச்சக் கரவண்டிகள் உரிமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் நேற்று காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் சங்கத்தின் முன்னாள் தலைவர் சி.தியா கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புதிய தலைவராக ஜே.ஜோஜ் கெனடி, உபதலைவராக நா.நாகராசா, செயலாளராக மு.கலைச் செல்வன், உபசெயலாளராக மு.திவாகரன், பொருளாளராக அ.மகேஸ்வரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக சி.யோகேந்திரன் அ.யூலியஸ் பெர்னாண்டோ ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (04)




## கலந்துரையாடல்

கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகத்தினால் 2012 ஆம் ஆண்டுக்கான கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல் 9.00 மணிக்கு பழைய வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி தொடர்பான இக்கலந்து ரையாடலுக்குக் கோட்டமட்டத்திற்குட்பட்ட பாடசாலைக ளின் விளையாட்டுப் பொறுப்பாசிரியரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கரவெட்டிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.நற்குண லிங்கம் அறிவித்துள்ளார். (116)

## முழுநிலா கருத்தரங்கு

மீசாலை உயர்கலைக் கல்லூரியில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத தின் ஆதரவுடன் இலவச முழுநிலா கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கை வரலாறு பகுதி - I பற்றி விரிவுரையை ஆசிரியர் சீ.சுயீகரன் காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக விவசாய பீட விரிவுரையாளர் கலாநிதி உ.மிகுந்தன் புவியியல் பாடத்தில பசுமைப் புரட்சி மற்றும் மரபணு தொழில்நுட்பம் சார்ந்த விரிவுரையை பகல் 12 மணிக்கும் நடத்தவுள்ளனர். இக் கருத்தரங்கில் ஆசிரியர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள் கலந்து பயன்பெறுமாறு மீசாலை உயர்கலைக் கல்லூரி எஸ்.ஜீவசுதாகரன் அறிவித்துள்ளார். (11)

**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)

நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்! இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்.

- சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## நம்மை அறிந்து மீள வேண்டும்!

சாதாரண அவலமுறும் மக்களை சமூகத்தின் பொது அங்கமாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளாதவர்கள், மக்களிடம் வன்முறையை நியாயப்படுத்துகிறவர்கள், ஆதிக்கக் குரலான தங்கள் குரலையே ஒட்டுமொத்த சமூகத்தின் குரலாக திணிப்பவர்கள்.... இந்தப் "பெரிய மனிதர்களுக்கே" சமூகம் கௌரவத்தையும் மரியாதையையும் கொடுத்து வைத்திருப்பது பற்றி மகாநதி படத்தில் நடிகர் கமல்ஹாசன் குமுறிப் பேசும் ஒரு காட்சி உண்டு. அதிலுள்ள உண்மையை நாமும் கண்டுகொண்டிருக்கிறோம்!

இவர்களெல்லாம், தனிநாடு சாத்தியமில்லை என்பதை எப்போதோ உணர்ந்துகொண்டுவிட்ட பிறகும், இத்தனை உயிரிழப்புகளும் பாழடைவும் பேரவலமும் நோக்கிச் சமூகம் செல்வதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தவர்கள்! அல்லது பொய்யான நம்பிக்கைகளைச் சொல்லி மக்களை மேலும் மரணப்பாதையில் முன்தள்ளி விட்டவர்கள்.

அழிவுகள் அவலங்களைப் பாதியிலேயே தவிர்த்துக்கொள்ளக் கூடிய, தீர்வை எடுத்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்களொன்றையும் பயன்படுத்த எண்ணாத வீம்பிலும் சமூகம் வைக்கப்பட்டது. யோசித்தால், நமது இன மொழி அபிமானமானது மாற்றுச் சமூகங்கள் மீதான வெறுப்பாக வளர்த்து விடப்பட்டதையே காரணமாகச் சொல்ல முடிகிறது.

எல்லோரையும் விலக்கி வேறுபடுத்தி யாருமற்ற தனியர்களான பிறகு, "கடைசி ஒருவர் இருக்கும்வரை யுத்தம்தான்" என்பதைத்தான் அறிவிக்க முடியும். மக்களைக் காப்பாற்றி வாழ்வளிக்கும் எந்தச் சிறு நம்பிக்கையையும் தரமுடியாது என்பதையே நாம் இப்போதும் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

இன்றைய உலகச் சூழ்நிலையில், மக்களைப் பிரித்து வேறுபடுத்தும் குறுகிய நம்பிக்கைகள் அல்ல, பிறரையும் இணைத்துச் சிந்திக்கும் நாகரிகப் பண்புகளே அழிவை நிறுத்தி மக்களுக்கு வாழ்வமைத்துக் கொடுக்க முடியும்.

ஒவ்வொரு மனிதனும் பிறரைப் பாதுகாப்பதற்காக உள்ளானே தவிர அழிப்பதற்காக அல்ல என்ற அறிவுமுதிர்ச்சியின் அடிப்படையிலேயே தலைமையும் அதன்கீழான மக்கள் ஒருங்கிணைப்பும் நிகழ வேண்டும்.

மனிதன் தன்னை இன்னொரு மனிதனது வேறுபட்ட வாழ்க்கைக் கொள்கையிலிருந்து தற்காத்துக்கொள்ள வேண்டும் என்ற அலாதியான மடமைதான் போருக்குக் காரணம் என்றார் ஒரு அறிஞர். பாம்பு மனிதனைக் கண்டால் கடிப்பதற்கும், மனிதன் பாம்பைக் கண்டால் அடிப்பதற்கும் காரணம் அந்த இரு தரப்பிடமும் இருக்கும் பயம்தான்.

தொடர்ச்சியான விரோதப் பேச்சுக்கள் மூலம் மாற்றுச் சமூகத்தவர்கள் குறித்தும், நம்மிடம் உருவாக்கப்பட்டபடி இருக்கிறது இந்த பய உணர்வு! அதேபோலத்தான் அவர்களிடமும்!

உலகெங்கிலும் இத்தகைய போரும் அழிவும் ஏற்பட்ட சமூகங்களில், பெருந்துக்கத்தால் உண்டான குற்றவுணர்ச்சியும், அதன்விளைவாக சுயவிமர்சனத்தோடு தங்களை மாற்றியமைத்துக் கொண்டதுமே நடந்திருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னான ஜப்பான், இனஒதுக்கலால் நிகழ்ந்த போருக்குப் பின்னரான தென்னாபிரிக்கா நல்ல உதாரணங்கள்.

நாமோ எந்த ஆதார பலமுமில்லாமலே, தொடர்ந்தும் அதே பகைவெறுப்பை வளர்த்துவிட்டுக் கொண்டிருக்கிறோம். குகை மனிதர் காலத்து குழுஆவேச உணர்ச்சி தவிர வேறு எந்த ராஜதந்திரமும் அற்றவர்களாக இருக்கிறோம்.

ஒருவகையில் பார்த்தால், மக்களைக் காக்கும் எந்த ராஜதந்திர வழிமுறைகளும் இல்லாதவர்களிடம் அல்லது தெரியாதவர்களிடம் ஒப்புக்கொடுத்து விட்டு, தடுமாறிக் கொண்டிருக்கும் காட்சியே நம் சமூகத்தின் சித்திரமாகத் தெரிகிறது.

நம் சமூகம் முதலில் தன்னை உணர்ந்து கொள்வதற்கான உரையாடல்களைத் திறக்க வேண்டும். அதிலிருந்து, எமது சமூகத்தின் மீட்சிக்கான யதார்த்த அணுகுமுறைகளுக்கு நாம் செல்ல வேண்டும்.

– ஆசிரியர்

## அதிகரிக்கிறது சிறுவர் துஷ்பிரயோகம் தடுத்து நிறுத்துவதற்கு துரித ஏற்பாடு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகத்தை தவிர்ப்பதற்காக சிவில் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தீர்மானித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் சிவில் பாதுகாப்பு படையினருடன் கலந்துரையாடவுள்ளதாக அதிகார சபையின் பிரதித் தலைவர் நந்தா இந்திரவங்ச தெரிவித்துள்ளார்.

கிராமிய மட்டத்தில் பாதுகாப்பற்ற முறையிலுள்ள சிறுவர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வது மற்றும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க சிவில் பாதுகாப்பு படையினருக்கு முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிறுவர்கள் பாதுகாப்பு மற்றும் அவர்கள் பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பாக மாகாண, மாவட்ட, கிராமிய மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள குழுவிற்கு ஒத்துழைப்பை வழங்கும் வகையில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக நந்தா இந்திர வங்ச கூறியுள்ளார். அத்துடன், சிறுவர்களுக்கு எதி ரான துஷ்பிரயோகத்தை தவிர்த்து கொள்வதற்கு பெரியவர்களின் ஒத்துழைப்பை நாடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## வீதி விபத்துக்களால் பாதிப்பு நட்டஈடு பெறுவதற்கு வாய்ப்பு

(கொழும்பு)

வாகன விபத்துக்களின் ஊடாக பாதிக்கப்படும் பாதசாரிகளின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக சட்ட உதவி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை உரிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி எஸ்.எஸ்.விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

வீதி விபத்துக்களை எதிர்நோக்கும் பாதசாரிகள் நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்காக செல்லும் வேலையில் பல்வேறு அசாதாரண நிலைமைகளை எதிர்நோக்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை போன்றே, வாகனங்களினால் விபத்துக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை கடந்த 3 மாதங்களில் 60 தொடக்கம் 70 வீதம் வரை அதிகரித்துள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகன விபத்துக்குள்ளாகும் நபர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு சட்ட ரீதியில் வலுவான உரிய முறையொன்று இல்லை எனவும் சட்டத்தரணி எஸ்.எஸ்.விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, வாகன விபத்துக்களை எதிர்நோக்கும் நபர்கள் காப்புறுதி நிறுவனத்தின் ஊடாக தமது நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் சட்ட உதவி ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி எஸ்எஸ்விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

## பரீட்சை விடைத்தாள்கள் மீண்டும் மாணவர் கையில்

(கொழும்பு)

பல்கலைக்கழக பரீட்சைகளில் தோற்றும் மாணவர்களின் விடைத்தாள்கள் திருத்தப்பட்டதன் பின்னர் மீண்டும் அதனை மாணவர்களுக்கு வழங்க உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, குறித்த பரீட்சை விடைத்தாள்களில் பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் நிலவும் பட்சத்தில், அதனை வேறொரு பேராசிரியரிடம் சென்று மீள்மதிப்பீடு செய்தவற்கான சந்தர்ப்பம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதற்கான சுற்றுநிருபம் எதிர்வரும் வாரத்தில் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கூறியுள்ளார்.

## மாசுபடும் வான்பரப்பு; பாதுகாக்க ஏற்பாடு

கொழும்பு நகரின் வான் பரப்பு மாசுபடுவதைக்கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வான் பகுதியை மாசுபடுத்தும் நடவடிக்கையை தவிர்ப்பதற்கான சட்டத்தை வகுப்பது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளது.

வான்பகுதியில் பதாகைகள் காட்சிப்படுத்தப்படுவதனால் வான் பகுதி மாசுபடுத்தப்படுவதாக அதிகார சபையின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நகர பகுதிகளிலுள்ள சிறிய வான் பரப்புகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இவ்வாறான பதாகைகள் காட்சிப்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சரித ஹேரத் கூறியுள்ளார். வான் பரப்பிற்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகள் குறித்து நாட்டில் இதற்கு முன்னர் எவ்வித வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சரித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்

## மாகாணங்களுக்கு அதிக அதிகாரம் இன ஐக்கியத்தைப் பாதிக்கும்

### என்கிறார் அமைச்சர் அதாவுல்லா

மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் ஒற்றுமையாகவும் நிம்மதியாகவும் வாழும் சகலவின மக்கள் மத்தியில் பிரிவினை ஏற்பட வழிவகுக்குமென உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்எம் அதாவுல்லா தெரிவித்தார். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களென இனங்களைப் பிரிப்பதும் எமது நாட்டினைப் பொறுத்தவரையில் பொருத்தமானதல்லவெனவும் அவர் கூறினார்.

இலங்கையின் 64 ஆவது சுதந்திர தின வைபவம் அம்பாறை நகர சபை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அம்மாவட்ட அரசாங்க அதிபர் நீல்த அல்விஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மாகாணங்களில் வாழும் சகலவின மக்களுக்கும் தேவையான பிரயோசனப்படுத்தக்கூடிய அதிகாரங்களே வழங்கப்படவேண்டுமே தவிர சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களுக்கென்று அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் அது நாட்டினை கூறுபோடுவதாக அமையும்.

நாட்டில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ்ந்துவரும் இந்நிலையில், பொறாமை கொண்ட வெளிநாட்டுச் சக்திகள் இந்நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்தி நாட்டின் வளங்களைச் சூறையாடுவதற்கு முயற்சிக்கின்றன. அதேபோல் உள்நாட்டில் அதிகாரத்தினை பெற எத்தனிக்கும் சக்திகளோடு சேர்ந்து நாட்டின் தலைமைத்துவத்தினையும் அரசாங்கத்தினையும் கவிழ்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

## இலட்சக்கணக்கில் மீன்கள் உயிரிழப்பு

காலி - ரத்கம களப்புவிலிருந்து மீன்கள் திடீரென உயிரிழந்துள்ளதாக மீனவ சங்கம் தெரிவித்துள்ளது. இயற்கையாக அமைந்த முகத்துவாரம் மூடப்பட்டமையே இதற்கான காரணம் என ரத்கம களப்பு பாதுகாப்பு மீனவ சங்கத்தின் செயலாளர் கே.கே. பியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ள போதிலும், தமது பிரச்சினைக்கு இதுவரை தீர்வொன்று பெற்றுக்கொடுக்கப்படவில்லை என பியரத்ன கூறியுள்ளார்.


கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் இலட்சக்கணக்கான மீன்கள் இந்தக் களப்புவில் உயிரிழந்தாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இயற்கையாக அமைந்த முகத்துவாரம் மூடப்பட்டுள்ளமையினால், நீர் வெளியேறுவதற்கு தடை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் குறித்த பகுதியில் மீன்களுக்கு தேவையான ஒட்சிசன் கிடைக்கவில்லை எனவும் அதனால் மீன்கள் உயிரிழந்துள்ளதாகவும் ரத்கம களப்பு பாதுகாப்பு மீனவ சங்கத்தின் செயலாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆராயவதற்கு தமது அதிகாரிகளை அப்பகுதிக்கு அனுப்பிவைப்பதாக கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அனில் பிரேமரத்ன உறுதியளித்தார்.

# கிளாலி கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்



(கிளிநொச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் தீவிர முயற்சியினால் கிளாலி மிகவேகமாக அபிவிருத்தி அடைந்து வருகின்றது என கிளாலி பங்கு அருட்தந்தை பத்திநாதர் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கிளாலி கடற்றொழிலாளரகளுக்கான மீன்பிடி வலைகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், முற்றாக அழிந்து போன கிளாலி பிரதேசம் மீள் குடியேற்றத்தின் பின்னரான மிகக்குறுகிய காலப்பகுதிக்குள் துரித வளர்ச்சியை கண்டுள்ளது. நாளுக்கு நாள் இதன் வேகம் அதிகரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதனை நான் அவதானித்து வருகின்றேன். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். அத்தோடு இப்பகுதி மக்களுக்கு பிரச்சினைகள் எழுகின்ற போதெல்லாம் அவர் நேரடியாகவே வருகைதந்து தீர்வினைப் பெற்றுத்தருகின்றார். இதில் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பான விடயத்தில் அவர் அதிக அக்கறையுடன் செயற்படுவதனையும் நாம் நேரடியாகவே காண்கின்றோம். அத்தோடு கல்வி மற்றும் உட்கட்டுமான செயற்பாடுகளிலும் நாடாளுமன்ற உறுப்பினர் கரிசனையாக உள்ளாரென அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு உரையாற்றிய பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், மீள்குடியமர்விற்குப் பின்னரான காலப்பகுதியில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை எமது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் துணையுடனேயே பெற்றுள்ளனர்.

அத்தோடு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் இவ்விடயத்தில் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தனர். அந்த வகையில் கிளாலி மக்களின் கடற்தொழில் விடயத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்.

இந்நிகழ்வில் இரண்டு மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடிவலைகள் கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சினால் 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. அத்தோடு சங்கத்தார் வயல் கிளாலி-புலோப்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவ சங்கங்களுக்கும் அலுவலக தளபாடங்களை நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கினார்.

இந்நிகழ்வில் கடற்தொழில் நீரியல் வளத்துறையின் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி, பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் முகுந்தன், கடற்தொழில் போதனாசிரியர் நக்கீரன் மற்றும் கடற்தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# அத்துமீறி குடியேறியோரை அகற்றுவதற்கு நடவடிக்கை

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் அரச காணிகளில் அண்மைக் காலங்களில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்களையும் ஒன்றுக்கு மேற்பட்ட அரச காணிகளை அத்துமீறிப் பிடித்து வைத்திருப்போரும் உடனடியாக வெளியேற்றப்படவுள்ளனர்.

இதற்கான தீர்மானம் கடந்த 27ஆம் திகதி பூநகரி பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்ற பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கான பணிப்பும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டது. பூநகரிப் பிரதேசத்தில் 64 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட நிலையில் அவர்களுக்குச் சொந்தக்காணி இல்லாத நிலையில் வீட்டுத் திட்டம் இரத்தாகும் நிலை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்குப் பொருத்தமான இடத்தில் அரச காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (112)

## நூல் வெளியீட்டு விழா

(முழங்காவில்)

பூநகரி ம.வி. மாணவன் எழுதிய இருவானொலி நாடகங்களைக் கொண்ட நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் பூநகரி கலசாரப் பேரவையினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன்.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமாரும், பூநகரிக் கோட்டக் கல்வி அலுவலர் எஸ்.தருமரத்தினமும் கலந்துகொள்ளவுள்ளார்கள். சிறப்பு விருந்தினராக பூநகரி வைத்திய அதிகாரி எஸ்.மதிவதனனும் கலந்துகொள்கிறார். (112)

## ஆலயச் சுற்றாடலில் மதுப்பிரியர்கள் அட்டகாசம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள சிவன் ஆலயச் சூழலில் மதுப்பிரியர்களின் அட்டகாசத்தால் அப்பகுதியில் வாழும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

மதுப்பிரியர்கள் மது அருந்திவிட்டு நாளாந்தம் ஆலயச் சூழலில் நின்று அட்டகாசம் புரிவதுடன், அப்பகுதியால் செல்லும் பொதுமக்களையும் தகாத வார்த்தைகளால் பேசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாட்டால் ஆலயம் புனிதத் தன்மை இழந்து காணப்படுவதுடன், ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களும் அசௌகரியங்களுக்கு மத்தியில் செல்லவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத்தின் புனிதத் தன்மையை பேணும் முகமாக இவ்வாறு அட்டகாசம் புரியும் மதுப பிரியர்கள் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (18)

# புதிய செம்மணி வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(அரியாலை)

கல்வியங்காட்டுச் சந்தைக்குப் பின்புறமாகவுள்ள புதிய செம்மணி வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதாகவும், இவ்வீதியுடனான போக்குவரத்து நாளாந்தம் சிரமங்களின் மத்தியில் இடம்பெறுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ்வீதியில் நீண்ட நாட்களாகக் காணப்படும் பாரிய பள்ளத்தால் பொதுமக்கள் அபாயத்தின் மத்தியில் பயணம் செய்ய வேண்டியுள்ளதுடன இரவு வேளைகளில் பள்ளம் தெரியாது அதனுள் விழும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

மேலும் குன்றும் குழியுமாகச் சேதமடைந்துள்ள இவ்வீதி ஒரு வருட காலத்துக்கும் மேலாகியும் இதுவரை திருத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை கருத்திற் கொண்டு இவ்வீதியைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (23)

# சந்தைக்குப் பெயர்மாற்றம் வேண்டாம் கிராம அபிவிருத்திக்கழகம் கோரிக்கை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியில் அமைந்திருக்கும் பொதுச் சந்தையின் வழமையான பதிவுசெய்யப்பட்ட பெயரையே தொடர்ந்தும் பயன்படுத்துமாறு கோரிக்கைவிடுக்கப்பட்டிருக்கிறது.

சிவன் கோயிலடி கிராம அபிவிருத்திக் கழகம் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளது.

வட்டுக்கோட்டை சுற்றுவட்டக் கிராமங்களுக்குப் பொதுவானதாக வலி.மேற்குப் பிரதேச சபையின் பொதுச் சந்தை (றாத்தலடி) வட்டுக்கோட்டையில் அமைநதுள்ளது. இப்பொதுச் சந்தையின் பெயரை ஒருசிலர் 2005 ஆம் ஆண்டு போர்க்கால சூழ்நிலையைப் பயன்படுத்தி சிந்துபுரம் பொதுச்சந்தை எனப் பெயரைச் சூட்ட அனுமதிகோரி வலி. மேற்குப் பிரதேசசபை செயலாளரிடமும், வலி.மேற்கு பிரதேச செயலாளரிடமும் அணுகியபோது அவர்கள் அவ்வாறு செய்ய மறுத்துவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து தன்னிச்சையாக மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் சிந்துபுரம் பொதுச் சந்தை (பொது அங்காடி) என்ற பெயரினைக் கொண்ட கற்றூணை அவர்கள் நாட்டினர்.


இதை எதிர்த்த பொதுமக்கள் அரசபதிவில்லாத அரச அங்கீகாரம் பெறதா பெயரை அகற்றக்கோரி பிரதேச சபையினரின் பதிவேட்டில் உள்ள பெயரான வலி.மேற்கு பிரதேச சபை பொதுச் சந்தை வட்டுக்கோட்டை என்னும் பெயரில் பலகையை நிறுவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுத்தனர். மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேற்படி நியாயத்தன்மையை உணர்ந்த பிரதேச சபை உத்தியோகத்தர்கள் சபையின் பதிவேட்டில் உள்ள பெயரான வலி.மேற்குப் பிரதேச சபை பொதுச்சந்தை வட்டுக்கோட்டை என்று திருத்தம் செய்வதற்காக அங்கு வந்தபோது ஒரு சிலர் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்றும் மேற்படி கிராம அபிவிருத்திக் கழகம் தெரிவித்துள்ளது.

# படகு கட்டும் தொழிற்சாலை ஜெயபுரத்தில் ஆரம்பம்

(முழங்காவில்)

வடக்கின் வந்தம் திட்டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் பூநகரி-ஜெயபுரத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் (போட்யாட்) படகு கட்டும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்நிறுவனத்தில் வேலை செய்வதற்கென கடல் தொழிலாளர்களில் இருந்து அறுவர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (112)



**தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோவிலில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கும்பாபிஷேகத் தின திருவிழாவின்போது சுவாமி வீதி வலம் வரும் காட்சியைக் காணலாம். (137)**

# கால்நடைகளின் தொல்லை; நெல் அறுவடை பாதிப்பு

(காரைநகர்)

காரைநகரில் காலபோக நெற்செய்கை முற்றுப் பெறும் நிலைக்கு வந்துள்ள போதிலும் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை காரைநகரில் நெற்செய்கையால் நல்ல விளைச்சல் ஏற்பட்டுள்ள நிலையில்-கால்நடைகளின் தொல்லையால் கைக்கெட்டியது வாய்க்கு எட்டுமோ எனத் தெரியாத நிலையில் எமது விவசாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

நெல் அறுவடை செய்யும்வரை கால்நடை வளர்ப்போரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனமெடுத்து கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (50)

# ஈச்சமோட்டை சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம்

ஈச்சமோட்டை சனசமூக நிலைய வருடாந்த கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி கூட்டப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட உள்ளது. கடந்த வருடத்திலிருந்து உரிய நிர்வாகம் இன்றி செயற்படாமல் இருந்த ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தினை யாழ்.மாநகர சபையின் முயற்சியால் இடைக்கால நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு இயங்க ஆரம்பித்தது.

கடந்த வருட இறுதியில் சிலரின் செயற்பாடுகளால் நிலையத்தில் பத்திரிகைகள் வாசிக்க வைப்பது நிறுத்தப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து இவ்வருட ஆரம்பத்திலிருந்து இளைஞர் குழுவினது முயற்சியால் தினசரி பத்திரிகைகள் வாசிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் உரிய நிர்வாகத்திடம் நிலையத்தைக் கையளிப்பதற்காக இடைக்கால நிர்வாகக் குழுவினால் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (42)

# கூட்டுறவுச் சபையின் பயிற்சி நெறிகளுக்கு அதிக பணியாளர்கள் இணைக்கப்படவேண்டும்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சபையினால் முன்னெடுக்கப்படும் பயிற்சி நெறிகளுக்கு அதிக பணியாளர்களை கூட்டுறவுச் சங்கங்கள் அனுப்பவேண்டும் என யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் விசேட பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சபையினால் முன்னெடுக்கப்படும் ஒன்றிணைந்த கல்வித்திட்டமே முதன்மையான செயற்பாடாகும். இன்று பல புதிய பயிற்சிகளை உள்ளடக்கப்பட்ட பயிற்சி நெறிகள் தயாராகவுள்ளன.

இப்பயிற்சியினை பெற்றுக் கொள்ள வரும் பணியாளர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே உள்ளது. இப்பயிற்சி நெறியை பெற்றுக் கொள்ள சங்கங்கள் பணியாளர்களை மட்டுமன்றி தலைவர்கள் பணிப்பாளர்கள், அங்கத்தவர்களையும் அனுப்பவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் கருத்து தெரிவிக்கையில், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை கூட்டுறவுக் கல்லூரியூடாக நடத்தும் வகுப்புக்களுக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி செலவிடப்படுகின்றது. இக்கல்வியை கூட்டுறவுப் பணியாளர்கள் 11பேரே பெற்றுக்கொள்கின்றனர்.

மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு சொந்தமான வீரசிங்கம் மண்டபம் அமைந்துள்ள காணியின் உறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு கடுமையான முயற்சிகளை எடுத்துள்ளோம். ஆனால் உறுதி இதுவரை கிடைக்கவில்லை என தெரிவித்தார். (120)



சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய கலை விழா நிகழ்வில் நிலைய முன்னாள் அதிபர் திருமதி ரு.இராசரத்தினம் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைக் காணலாம். (11)

# மேற்கத்தேய இசைக்கருவிகள் பாடசாலைகளுக்கு அன்பளிப்பு

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஒட்டுசுட்டான் கோட்டத்திற்குட்பட்ட ஐந்து பாடசாலைகளுக்கு மீள்குடியேற்ற அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத்பதியுதின் ஏற்பாட்டில் மேற்கத்தேய இசைக்கருவிகள் (பான்ட்) வழங்கப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் முதல் முறையாக பல பாடசாலைகளில் இவ் இசைக்கருவிகளின் உதவியுடன் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக முத்தையன் கட்டு வலது கரை அ.த.கபாடசாலை, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு இவ்வாறு இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. (42)

# வடமராட்சி கல்வி வலயத்தினால் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்தினால் தரம் -11 வரையான பாடசாலைகளான யாழ். கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயம், கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் மீள ஆரம்பிக்கப்படவிருக்கின்ற யாழ். நாகர் கோவில் அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றிற்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதற்கு இலங்கை அதிபர் சேவையை சேர்ந்தவர்களும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2-Iஐச் சேர்ந்தவர்களும் விண்ணப் பிக்க முடியும். இதில் விண்ணப்பிப்போர் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பிப்பவர்கள் அதிபர் சேவையை சேர்ந்தவர்களாக இருப்பின், தற்போது கடமையாற்றும் பாடசாலையில் குறைந்தது 3 வருடங்கள் கடமையாற்றி இருத்தல் வேண்டும்.

இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த பொருத்தமானவர்களது விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் ஆசிரியர் சேவையை சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

மேலும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத பட்சத்தில் மாத்திரம் இலங்கை ஆசிரியர்சேவை 2-Iஐச் சேர்ந்தவர்களில் இருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.விண்ணப்பிப்போர் விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் பெற்று எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் அறிவித்துள்ளார். (116)

# முரசின் இன்றைய பலன்

(06.02.2012 -திங்கட்கிழமை)

கர வருஷம் தை மாதம் 23 ஆம் திகதி. சதுர்த்தி பின்இரவு 4.58 வரை. நட்சத்திரம் புனர்பூசம் பிற்பகல் 1.59 வரை. அமிர்தசித்தம்

இராகுகாலம் 8.05 - 9.35 வரை சுபநேரம் 12.35 - 2.05 வரை.

எமகண்டம் 11.05 - 12.35 வரை. குளிகைகாலம் 2.05 - 3.35 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தேர்ச்சி, பண வரவில் பிறழ்வு, வியாபார பிரச்சினை, கூட்டு முயற்சி. |
| ரிஷபம் | பண வரவு, மனோதிடம், சாதனைபுரிவீர், பங்காளிகளால் கெடுபிடி. |
| மிதுனம் | குழப்பம், அவதானம் அவசியம், பிணைநிற்கவேண்டாம், வேலை வாய்ப்பு. |
| கடகம் | நல்லாசிகள், வீண்செலவு, முதலீடுகளில் கவனம், மருத்துவச் செலவு. |
| சிம்மம் | அலைச்சல், நற்சிந்தனை, இடையூறுகள் அகலும், உடல் ஆரோக்கியம். |
| கன்னி | காரியானுகூலம், முதலீடுகளை தவிர்க்கவும், இடமாற்றம், புத்திரர் மகிழ்ச்சி. |
| துலாம் | பணவிரயம், கொடுக்கல் வாங்கல் திருப்தி மன உழைச்சல், வீண் பிரச்சினைகள். |
| விருச்சிகம் | நல்லதகவல், அதிர்ஷ்டம், நண்பர்கள் உதவி, குடும்பத்தில் திருப்தி. |
| தனுசு | புதுமுயற்சி தவிர், அதிகாரிகள் உதவி, கடன்கட்டுக்குள், கழுத மூலம் நன்மை. |
| மகரம் | பகை தீரும், சாதனைகள் புரிவீர், எதிர்ப்புகள் அகலும், உடல் ஆரோக்கியம். |
| கும்பம் | உல்லாசம், இலாபம்கிட்டும், தடைக்குப்பின் வெற்றி, மனச்சஞ்சலம். |
| மீனம் | தெளிவு, உறவினர் உதவி, கடன்தொல்லை நீங்கும். பெண்களுக்கு திருமண வாய்ப்பு. |


# அன்புவார ஒன்று கூடல்

(வடமராட்சி)

வட பிராந்திய சத்திய சாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு நடாத்தும் அன்பு வார ஒன்று கூடல் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு பிரசாந்தி கொடியேற்றத்துடன் ஓங்கார காயத்திரி ஆரம்பமாகி ஆரம்ப உரையை வடமராட்சி சாயி நிலையங்களின் இணைப்பாளர் வே.சேனாதிராசா, வாழ்த்துரையை வடபிராந்திய சத்திய சாயி நிறுவன இணைப்புக் குழுத் தலைவர் டாக்டர் ஆர்.கணேசமூர்த்தி, சிறப்புரையை சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வி இணைப்பாளர் சி.சி.சிவனேசன், வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி. நந்தகுமார் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பரிசு பெற்ற மாணவர்களின் ஆக்கங்களை சமர்ப்பித்தலும் சாயி சங்கற்ப வீடியோ படக் காட்சியும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல் நிகழ்வும் இடம்பெறுவதுடன் தொடர்ந்து மதியபோசனமும் வழங்கப்படும் என பருத்தித்துறை சாயி நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (116)



# பரமர் சங்கமம்

எமது நாட்டு மகாகவி உருத்திரமூர்த்தி என்பார். அவர் தமிழ் கவிதை வடிவத்தில் பல பரிசோதனை முயற்சிகளைச் செய்து வெற்றி கண்டவர்.

அவரது மகன் சேரன்: இவரும் கவிதைத் துறையில் முன்னணி வகிப்பர். இவரது சமீபத்திய செவ்வி ஒன்றில் கூறிய கருத்து பலரிடை சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளது.

அதொன்றும் புதுமையான விசயமில்லை. பழம் பெரும் வேதகாமக் கதை ஒன்றில் சொல்லப்பட்ட இரு தாய்மார் ஒரு பிள்ளை விவகாரம் தான்.

அதனைக் கவிஞர் கண்ணனதாசன் சினிமாப் பாடலொன்றிலும் புகுத்தி இருந்ததார். அந்தப் பாடலின் இடைநடுவில் "சேவகா... இந்தப்பிள்ளையை ஆளுக்குப் பாதியாகக் கொடு..."

இவ்வாறு சாலமன் அரசன் கட்டளை இட்டதும் குழந்தையின் உண்மைத் தாய் என்ன செய்வாள் பிள்ளை தனக்குக் கிடைக்கா விட்டலும் உயிரோடு இருக்கத்தானே விரும்புவாள்.

அந்தச் சூட்சுமத்தை அறியவும், நீதி சரியாக வழங்கப்படவும் அந்தக் காலத்தில் மதிநுட்பமாகவே அணுக வேண்டி இருந்தது.

அது போலவே நமது நாட்டிலும் கடந்த 2006ஆம் ஆட்டில் ஏற்பட்ட சுனாமியால் நீரலையில் அடித்துச் செல்லப்பட்ட குழந்தை அபிலாஷ்சை இரு தாய்மார் தமது குழந்தை என்று வாதாடியதை நீங்கள் மறந்திருக்க மாட்டியள்.

பிறகென்ன நடந்தது சாலமன் காலத்தில் இல்லாத மரபணுச் சோதனை தான் இன்றிருக்கிறதல்லவா? அதனூடாக உண்மையான பெற்றோரைக்கண்டு பிடித்து குழந்தையை ஒப்படைத்ததெல்லாம் பழங் கதைகளாகிப் போயின.

இப்பொழுது நமது கவிஞர் சேரன் அதைப் புதிய கண்ணோட்டத்தில் அணுகி இருப்பதுதான் விந்தை: மட்டுமல்லாமல் பலரிடையே சர்ச்சைகளையும் தோற்று வித்துள்ளது.

அவர் 'ஒரு பிள்ளைக்கு இரு தாய்மார் இருக்கலா' மென்பதே சர்ச்சையைக் கிளப்பி விட்டிருக்கும் விடையமாகும். முற்போக்குச் சிந்தனைகளைத் தமது படைப்புக்களில் விதைத்து வந்த ஒரு தலை சிறந்தவர் என வர்ணிக்கப்பட்ட கவிஞர் இப்படிச் சொல்லி இருப்பது அவரையே வித்தியாசமாக நோக்க வைத்துள்ளது.

அவர் இரு தாய்மார் கோட்பாட்டை ஈழமண்ணில் இருந்து புலம் பெயாந்த தமிழர்களின் உணர்வு பூர்வமாக முன் வைத்துள்ளார்.

ஈழத்தவர்களான அவர்களுக்கு அவரும் ஒரு தாய்: புலம் பெயர்ந்த மண்ணும் இன்னுமொரு தாயென விபரிக்கிறார்.

இது உணர்வு பூர்வமான கூற்றாக இருந்த போதும் எதார்த்த அணுகு முறையில் இருதாய்க் கோட்பாட்டை எந்த அலகிலும் போட்டு தீர்வு கண்டு விட முடியுமா?

பின் நவீனத்துவம் என்னும் கோட்பாடொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதனூடாக ஏற்றுக் கொள்பவர்கள் காலம் பூராகவும் சொல்லி வந்தாலும் தாய் ஒன்றென்ற உண்மை நிலையை வென்றுவிட முடியாது என்பதே உண்மை!

தாய்யொன்று என்பது மட்டுமல்லாமல் தந்தையும் ஒன்றென்பதை ஏற்றே ஆக வேண்டும். புராண இதிகாசங்களில் சித்திரிக்கப்பட்ட கற்பனாவாதக் கதைகளில் கூட தாய் ஒருவராகவும், தந்தை ஒருவராகவுமே படைக்கப்பட்டுள்ளன.

பஞ்சபாண்டவர்களுக்கு வாழ்க்கைப்பட்ட திரளெபதையை உதாரணதுக்கு எடுத்துக் கொள்ளலாம்மென்பது பரமருடைய அபிப்பிராயமுங்கோ!

# கடற்புலிகளின் தளபதி சூசையின் மனைவி சத்தியதேவி மனம் திறந்து பேசுகிறார் – 1

-சாமரா லக்ஷன் குமார-



எல்.ரீ.ரீ.ஈ யின் தலைவர் ஒருமுறை அடுத்த ஈழப்போர் நடுக்கடலில்தான் நடைபெறும் என மிகைப்படுத்திப் பேசியிருந்தார். அவரது அந்த மிகைப் படுத்தல் உதிப்பதற்கு காரணமாக இருந்தது, அவர்களது கடற்புலிகள் என்றழைக்கப்படும் போராளிகள் தங்களிடமுள்ள பல்வேறு வகையான கப்பல்கள் மற்றும் படகுகள் மூலமாக வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள கடற்படையினருக்கு ஒரு அச்சுறுத் தலாக மாறியிருந்ததே. கடற்புலிகளின தலைவர சூசை, எல்.ரீ.ரீ.ஈ யினருக்கு எதிராக நடத்தப்பட்ட இறுதி யுத்தத் தில் கொல்லப்பட்டார் மற்றும் அவர் மனைவி சத்தியதேவி தனது இரண்டு குழந்தைகள் மற்றும் சில நெருங்கிய உறவினர்கள் சகிதம், தப்பிச் செல்வதற்காக அவரது கணவர் சூசை வழங்கிய படகு ஒன்றின் மூலம் நந்திக்கடல் பிரதேசத்தை விட்டு வெளியேற முயன்றார்.

“த நேசன்”க்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலில் சவாலான அந்த நாட்களையும் மற்றும் பாதுகாப்புக் காவலில் உள்ள அவரது தற்போதைய வாழ்க்கையையும் வெளிப்படுத்துகிறார்.

**கேள்வி:** உங்கள் கணவர் சூசையை எவ்வாறு நீங்கள் முதன்முதலில் சந்தித்தீர்கள் என்று சொல்வீர்களா?

**பதில்:** சூசை எல்.ரீ.ரீ.ஈ யில் பணியாற்றிய எனது அண்ணனின் ஒரு நண்பராவார். அந்த நேரத்தில் அவர் எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கம். 1982இல் எல்.ரீ.ரீ.ஈ க்காக தனது உயிரைத் தியாகம் செய்த முதல் போராளி எனது அண்ணன். எனது அண்ணனின் மறைவுக்குப் பின்னரும் கூட சூசை எங்கள் வீட்டுக்கு வருவது வழக்கமாகிவிட்டது. நான் அவரை விரும்பத் தொடங்கினேன்.



அவர் தேவைப்படும் சமயத்தில் மிகவும் உதவி புரிபவராகவும் மற்றும் அவசியப் படுபவர்களுக்கு உதவி புரிவதில் தயக்கம் காட்டாதவராகவும் இருந்தார். அவருடைய நல்ல பழக்கங்கள் என்னைக் கவர ஆரம்பித்தன மற்றும் நாங்கள் நெருக்கமானவர்களாக மாறினோம். நாங்கள் திருமணம் செய்ய முடிவு செய்தபோது, அவர் எல்.ரீ.ரீ.ஈ யில் இணைந்து இருந்ததால் எனது பெற்றோர் அதற்கு சம்மதிக்கவில்லை. அப்போது அவர் வடமராட்சி பகுதியின் உள்ளூர் தலைவராக இருந்தார். எனினும் நாங்கள் திருமணம் செய்து கொண்டோம், மற்றும் அதன் பின் விரைவிலேயே அவர் கடற்புலிகளின் தலைவராக மாற்றம் பெற்றார்.

**கேள்வி:** நீங்கள் அப்போது எல்.ரீ.ரீ.ஈ யில் இணைந்து கொண்டிருந்தீர்களா?

**பதில்:** இல்லை

**கேள்வி:** சூசையை மணந்த பிறகும் அந்த நிலையில் மாற்றம் ஏற்படவில்லையா?

**பதில்:** அதன் பிறகும் மாறவில்லை.

**கேள்வி:** ஏன்?

**பதில்:** அது அவசியம் என்று நான் கருதவில்லை. சூசையும் என்னை எல்.ரீ.ரீ.ஈ யில் இணையும்படி ஒருபோதும் வற்புறுத்தியது கிடையாது.

**கேள்வி:** சூசை, எல்.ரீ.ரீ.ஈ விடயங்களைப்பற்றி வீட்டில் விவாதிப்பாரா?

**பதில்:** அப்படியான விடயங்களை அவர் ஒருபோதும் விவாதிப்பதில்லை. நாங்கள் வீட்டில் எங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்ப விடயங்களைப் பற்றியே பேசுவோம்.

**கேள்வி:** அவர் வீட்டுக்கு வந்ததும் எதைப்பற்றி விவாதிப்பார்?

**பதில்:** அவருக்கு சிறிதளவு ஓய்வே கிடைக்கும். அவர் வீட்டுக்கு வருவது பிரதானமாகவும் உறங்குவதற்கு வேண்டியே.

**கேள்வி:** உங்கள் வீடு எங்கே உள்ளது?

**பதில்:** ஆரம்பத்தில் நாங்கள் யாழ்ப்பாணத்தில் வசித்தோம், ஆனால இராணுவத்தினர் ‘ஒப்பறேசன் ரிவிரச’ நடவடிக்கையை ஆரம்பித்த பின்னர், நாங்கள் நகரத்தை விட்டு இடம் பெயர்ந்தோம். நாங்கள் தேவபுரம், முல்லைவெளி, வள்ளிக்குளம் மற்றும் இறுதியாக 2007இல் புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் வாழ்ந்தோம்.

**கேள்வி:** சூசை ஒரு வலிமையான மனிதராக அறியப்பட்டிருந்த போதிலும், தனது பிள்ளைகளுக்கு ஒரு நல்ல தந்தையாக இருந்ததாக அநேகர் எழுதி அல்லது சொல்லி இருக்கிறார்கள். அது உண்மையா?

**பதில்:** அவர் தனது பிள்ளைகளை அளவுக்கு அதிகமாக நேசித்தார். எங்கள் மகனின் முதலாவது பிறந்த நாளின்போது, எங்கள் மகனுக்கு அவர் எல்.ரீ.ரீ.ஈ யினருக்கு சொந்தமாகவிருந்த முதல் கப்பலின் வடிவத்திலிருந்த கேக் ஒன்றை கொண்டு வந்திருந்தார். அது நெல்லியடியில் இருந்த சுபாஷ் வெதுப்பகத்தில் தயாரிக்கப்பட்டது.

அவரது கடமைகள் அவரது பிள்ளைகளுடன் அதிக நேரத்தைச் செலவழிக்க அவருக்கு இடமளிப்பதில்லை, ஆனால் அவர்கள்ளக் கவனமாகப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பினை அவர் என்னிடம் ஒப்படைத்திருந்தார்.

**கேள்வி:** 2004இல் சூசை சிங்கப் பூருக்கு சென்றுள்ளார். அவரின் அந்த பயணத்தைப்பற்றி சொல்வதற்கு ஏதாவது உள்ளதா?

**பதில்:** இந்திய கடற்படை படகு ஒன்று கடற்புலிகள் மீது நடத்திய தாக்குதலில் சூசை காயங்களுக்கு இலக்கானார். எல்.ரீ.ரீ.ஈ யின் காவல்துறை தலைவர் நடேசன் மற்றும் வருவாய்த்துறை தலைவர் தமிழேந்தி ஆகியோரும் அந்த சிறுபோரில் காயமடைந்தனர். தற்காலிகமாக காயங்களுக்கு சிகிச்சையளிக்கப் பட்டபோதும், சில காயங்கள் அதன்பின் மிகவும் மோசமாக மாறின. அதனால் தீவிர சிகிச்சைக்காக சூசையை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டியது அவசியமாகியது.

**கேள்வி:** சிங்கப்பூருக்கு போகும் சந்தர்ப்பம் சூசைக்கு எப்படிக் கிடைத்தது?

**பதில்:** அது எப்படி நடந்தது என்று எனக்குத் தெரியாது. தான் மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூருக்கு போக வேண்டி இருப்பதாக அவர் என்னிடம் தெரிவித்தார். சூசைக்கு சிங்கப்பூருக்கு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு எல்.ரீ.ரீ.ஈ அரசாங்கத்திற்கு அறிவித்தது. அரசாங்கமும் அதற்கு அனுமதி வழங்கியது. அவர் போகும்போது ஒரு மருத்துவரும், இரண்டு மெய்ப் பாதுகாவலர்களும், அவருடன் கூடச் சென்றார்கள். ஒரு எல்.ரீ.ரீ.ஈ நபர் சூசையுடன் பேசுவதற்காக ஒரு தொலைபேசியை எனக்குத் தந்தார். சிங்கப் பூரிலிருந்து இரண்டு தரம் சூசை என்னுடன் தொலைபேசியில் பேசினார்.

**கேள்வி:** பிரபாகரனுக்கும் சூசைக்கும் இடையே உறவு எப்படியாக இருந்தது.

**பதில்:** சூசை பிரபாகரன் மீது உயர்வான நம்பிக்கை வைத்திருந்தார், மற்றும் அதேபோல பிரபாகரனும் சூசைமீது உயர்வான நம்பிக்கையை வைத்திருந்தார்.

**கேள்வி:** உங்களது குடும்பம் பிரபாகரனின் குடும்பத்தினரோடு எந்த வகையான உறவினைக் கொண்டிருந்தது?

**பதில்:** எங்களது குழந்தைகள் பிறந்த நேரத்தில் பிரபாகரனின் குடும்பத்தினர் அனைவரும் எங்களிடம் வருகை தந்தனர். அதைத்தவிர வேறு வருகைகள் எதுவும் இடம் பெறவில்லை. ஆனால் புலிகளின் விழாக்களிலோ அல்லது வேறு பொது நிகழ்ச்சிகளிலோ நிச்சயமாக நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்வோம். அப்போது நாங்கள் எங்களுக்கு அக்கறையுள்ள பல விடயங்களையும் பற்றிப் பேசிக் கொள்வோம். பிரபாகரன் மற்றும் மதிவதனி ஆகிய இருவருமே எப்படி எங்களின் குழந்தைகளின் படிப்பு விடயங்கள் முன்னேற்றகரமாக உள்ளனவா என வழக்கமாக எங்களிடம் விசாரிப்பதுண்டு.

**கேள்வி:** உங்களுக்கு எல்.ரீ.ரீ.ஈயினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் யுத்தம் ஒரு ஆபத்தான கட்டத்தை நெருங்கி வந்தபோது நீங்கள் அச்சமடையத் தொடங்கினீர்களா?

**பதில்:** ஏன் இல்லை. யார்தான் அச்சப்பட மாட்டார்கள்?

**கேள்வி:** அப்போதுகூட எல்.ரீ.ரீ.ஈ யை விட்டு விலகுமாறு அவரிடம் கேட்க வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?

**பதில்:** நான் அவரிடம் கேட்டிருந்தால்கூட அவர் ஒருபோதும் எல்.ரீ.ரீ.ஈ யை விட்டு வெளியேறியிருக்க மாட்டார். தனது சாவு, தான் எல்.ரீ.ரீ.ஈக்காக பணியாற்றும்போது வரக்கூடுமே தவிர வேறு வழியினால் அல்ல என்று அவர் வழக்கமாகச் சொல்வதுண்டு.



**கேள்வி:** 2007ஆம் ஆண்டு உங்களுக்கு ஒரு மோசமான ஆண்டாக இருந்தது அல்லவா, உங்கள் மகன் சங்கர் இறந்தது மற்றும் சூசை கூட மிகவும் மோசமான காயங்களுக்கு உள்ளானது போன்றவற்றால்?

**பதில்:** எனக்கு அந்த திகதி நினைவில் உள்ளது. அது ஜுலை 18ஆம் திகதி. கிளிநொச்சியில் நடக்கும் ஒரு விழாவுக்காக நான் வாகனமொன்றில் செல்ல இருந்தேன். எங்களது இளையமகன் வாகனங்களில பயணம் செய்வதில் அளவுகடந்த ஆசை உள்ளவனாக இருந்தான், அதேபோலவே அவன் கடலையும் விரும்பினான். ஆனால் சூசை ஒரு போதும் எங்களது மகனை கடலுக்கு கூட்டிப்போனது கிடையாது. அவர் அவரது மகனை கரையில் உள்ள படகு ஒன்றில் இருக்கும்படி சொல்லி விட்டு அவர் ஆழ்கடலுக்குச் செல்வார். சங்கர் படகிலிருந்து மற்றவர்களுடன் வியைாடுவான்.

இது நடந்த தினத்திலும் கூட இதையேதான் சூசை செய்தார், ஆனால் எப்படியோ அல்லது வேறுவிதமாகவோ அவர் தனது ஆட்களிடம் எனது மகன் இருந்த படகினையும் ஆழ்கடலுக்கு கொண்டு வரும்படி சொல்லியிருக்கிறார். அந்நேரத்தில் படகுகள் சில பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. பயிற்சியில் ஈடுபட்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ படகுகளில் ஒன்று, சூசையின் படகுடனும் மற்றும் எனது மகன் இருந்த படகுடனும் மோதியது. இந்த விபத்தில் நான் எனது மகனைப் பறிகொடுத்தேன்.

**கேள்வி:** அது திட்டமிட்ட ஒரு விபத்து என்று நாங்கள் கேள்விப் பட்டோம்?

**பதில்:** அப்படி ஒரு வதந்தி நிலவியது, ஆனால் அது ஒரு விபத்து என்றே நான் நம்புகிறேன்.

**கேள்வி:** அந்த விபத்தில் சூசைக்கு என்ன நடந்தது?

**பதில்:** அவரது வயிற்றில் மிக நீளமாக கிழிக்கப்பட்டிருந்த காயம் இருந்தபோதிலும் உண்மையில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது மற்றும் அது நடந்தபின் மூன்று வாரங்களாக அவர் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தார்.

**கேள்வி:** பொட்டு அம்மான் அந்த படகு விபத்தை ஏற்பாடு செய்ததாக வதந்தி பரவியது அதுகுறித்து எல்.ரீ.ரீ.ஈ கடும் மௌனம் சாதித்ததால் அந்த வதந்தி உண்மையோ என்கிற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது?

**பதில்:** ஆனால் அவர் அந்த விபத்தை ஏற்பாடு செய்திருப்பார் என நான் நினைக்கவில்லை.

**கேள்வி:** பொட்டு அம்மான் அந்த விபத்து நடந்ததுக்குப் பிறகு உங்களுடன் பேசினாரா?

**பதில்:** ஆம் அவர் என்னுடன் பேசினார். பொட்டு அம்மான் மட்டுமல்ல மற்ற எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களும் என்னுடன் பேசினார்கள். எல்லா எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களும் எனது மகனின் மரணச் சடங்கில் கலந்து கொண்டார்கள்.

**கேள்வி:** காயங்கள் சுகமடைந்த பின்பு அந்த விபத்தைப்பற்றி சூசை ஏதாவது சொன்னாரா?

**பதில்:** எமது மகனின் மறைவினால் அவர் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்திருந்தார். அது அவருடன் நீண்டகாலமாகவே தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. நான் அவரிடம் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாடுகளிலிருந்து கொஞ்ச நாட்கள் ஒதுங்கி இருக்கும்படியும் ஆனால் தேவைப்பட்டால் அவர்களுக்கு உதவும்படியும் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவர் எனது அறிவுரைகளைக் கேட்கவில்லை.

**கேள்வி:** நீங்கள் எல்.ரீ.ரீ.ஈயினருக்கு எதுவித உதவியும் செய்வதில்லை எனச் சொல்லப்படுகிறதே. நீங்கள் வீட்டிலிருந்து என்ன செய்வீர்கள்?

**பதில்:** நான் எனது குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதுடன் வீட்டில் அவர்கள் தேவைகளையும் பார்த்துக் கொள்வேன். எங்கள் தேவைகளுக்கு வேண்டிய உணவுப் பயிர்களை நானே பயிர் செய்து கொள்வேன். எனது குழந்தைகளுடன் தொலைக்காட்சி பார்ப்பதில் இணைந்து கொள்வேன்.

**கேள்வி:** எல்.ரீ.ரீ.ஈ வீட்டு வேலைகளில் உங்களுக்கு உதவிகளை வழங்காத போதிலும் எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களின் குடும்பங்களுக்கு வாகனங்களையும் பாதுகாப்பினையும் வழங்கியிருந்ததே?

**பதில்:** எங்களுக்கு ஒரு வானும் மற்றும் சாரதியுடன் கூடிய ஒரு முச்சக்கர வண்டியும் மற்றும் ஒரு பாதுகாப்பு கடமையாளரும் வழங்கப்பட்டிருந்தன.

(மிகுதி நாளை)

# இருக்கும் பிரச்சினைகளை முதலில் ஏற்றுக்கொள்ளல்

-கலாநிதி ஜெகான் பெரேரா-



உருவாகியிருக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் மாற்றங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும். மாற்றங்களுக்கான ஆயத்தங்கள் இல்லையெனில் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஊடகவியலாளர்களின் கொலைகள் மற்றும் காணாமற்போதல்கள் என்பனதான் ஊடக சுதந்திரத்திற்கான உலக தரப்படுத்தல் வரிசையில் இலங்கை மிகவும் தாழ்வான இடத்தில் இருப்பதற்கான உண்மையான காரணமாகும்.

அதே போலத்தான் யுத்தத்தின்போது கொல்லப்பட்ட மற்றும் காணாமற்போன தமிழ் குடிமக்களின் பிரச்சினைதான் பொறுப்புக்கூறும் கடப்பாட்டுக்காக சர்வதேசம் தொடர்ச்சியான கோரிக்கைகளை மேற்கொள்வதற்கான காரணமும்.

வரும் மாதங்களில், ஜெனிவாவில் நடக்கவிருக்கும் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையின் வருடாந்தர அமர்வின்போது சர்வதேச சமூகத்தின் முன்பாக அரசாங்கம் தனது மனித உரிமைகள் பற்றிய பதிவுகளை தற்காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

தன்மீது குற்றம் சுமத்துபவர்கள் முன்பாக அரசாங்கம் முன்வைக்க இருக்கும் ஒரே சாதனை அநேகமாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (எல்.எல்.ஆர்.சி) யின் அறிக்கையாகத்தான் இருக்கும். அந்த அறிக்கையில் எல்.எல்.ஆர்.சி ஆணையாளர்கள், சுதந்திர ஊடகங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு முக்கிய இடம் வழங்கியிருப்பதோடு, கடந்த காலங்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமற்போன ஊடகவியலாளர்களைப்பற்றி விசாரணை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை கோரியுள்ளனர்.

எல்.எல்.ஆர்.சி அறிக்கை மேலும் குறிப்பிடுவது அவர்களது இடைக்காலப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் படவில்லை என்று. அவற்றில் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விபரங்களை அவர்களது உறவினர்களுக்கு தெரியப்படுத்துவதோடு மற்றும் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள் ஆகியோரின் விதி என்ன என்பதையும் அறிவிக்க வேண்டும் என்பதும் உள்ளடங்கியுள்ளது.


அரசாங்கத்தின் கடப்பாடு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியதே தவிர, அதற்கான தீர்வினை தள்ளிப் போடுவதோ அல்லது அப்படியான பிரச்சினைகள் எதுவுமே இல்லை என்று ஒரேயடியாக மறுப்பதோ இல்லை. காலம் செல்லும்போது காயங்கள், தானே ஆறக்கூடிய வகையானதோ அல்லது பொருத்த மற்றதாக மாறக்கூடியனவாகவோ உள்ள சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன.

எப்படியாயினும் காணாமற் போனவர்கள் மற்றும் கொடூரமான சூழ்நிலையில் கொல்லப்பட்டவர்கள் போன்ற மக்களின் நினைவுகளோடு ஒன்றித்துவிட்ட பிரச்சினைகள் அநேகமாக ஒரு போதும் தானாகவே மறைந்து போய்விடும் என்பது நிச்சயமாக நடக்காது.

பிரெஞ்ச் அரசாங்கம், 1915இல் துருக்கியில் வைத்து ஒரு மில்லியன் ஆர்மேனியர்களை ஒரு இன ஒழிப்பு நடவடிக்கையாக குரூரமாக கொலை செய்ததை மறுப்பது சட்டவிரோத செயல் என சமீபத்தில் முடிவு செய்திருக்கும் செயல் இலங்கையில் உள்ள நமக்கு பொருத்தமான ஒரு நினைவூட்டலாகும்.


தற்போதைய இலங்கை அரசாங்கம் கடந்த காலத்தின் ஆற்ற முடியாத காயங்களாக தேங்கி நிற்கும் நினைவுகளை இப்போதிருந்து ஒரு நூறு வருடங்களுக்கு மேலும் வளர்ச்சியடையவோ அல்லது பல்கிப் பெருகி மற்றும் பாழடைய விட்டுவிடக் கூடாது.

## ஜில்லென்று சில சிற்பங்கள்!



பனிக்கட்டிகளால் செதுக்கப்பட்ட சிற்பங்களுக்காகவே ஜப்பான், கனடா, நோர்வே, சீனா போன்ற நாடுகளில், உறை பனிக் காலங்களில் சர்வதேச அளவிலான திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. அழகான வளைவுகள், தத்ரூபமான உருவங்கள், கண்களையும், மனதையும் கொள்ளையடிக்கும், பல்வேறு வண்ண ஒளி பாயும் வகையில் வடிவமைக்கப்படும் இந்த பனிச் சிற்பங்களை, "ஜில்"லிடச் செய்யும் 0 பாகைக்கும் குறைந்த வெப்பநிலையில் செய்கிறார்கள்.

பல நாடுகளில், இந்த பனிச் சிற்பத் திருவிழா நடந்தாலும், சீனாவின் குளிர் பிரதேசமான ஹார்பின் நகரில், கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்படும் இந்த திருவிழா, மிக பிரமாண்டமாகவும், உலகம் முழுவதும் உள்ள பார்வையாளர்களை கவரும் வகையில் உள்ளது.



இந்த ஆண்டும், ஹார்பின் நகரில் இந்த திருவிழா தொடங்கியுள்ளது. -17 டிகிரி செல்சியசில், பரந்து விரிந்த, 150 ஏக்கர் பரப்பளவில், 95 கோடி ரூபா செலவில், கடந்த இரண்டு மாதத்துக்கும் மேலாக, 45க்கும் மேற்பட்ட பனிச் சிற்பங்கள் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

உலக அதிசயங்களாக கருதப்படும் பைசா நகரின் சாய்ந்த கோபுரம், தாஜ்மகால், சீனப் பெருஞ்சுவர் மற்றும் மன்னர் காலத்து அரண்மனைகள் ஆகியவை பனிக் கட்டிகளால் பிரமாண்டமாகவும், எழில் கொஞ்சும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளன.


சீனா மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிற்பக் கலைஞர்கள் இவற்றை உருவாக்கியுள்ளனர். இந்த ஆண்டின் விசேடம் மறைந்த ஹொலிவுட் நடிகை மர்லின் மன்றோவின் பனிச் சிற்பம்தான்.

முழங்காலுக்கு மேல் காற்றில் பறக்கும் கவுணை, கைகளால் இறுக்கிப் பிடித்தபடி தோன்றும் மர்லின் மன்றோவின் அந்த உலகப் பிரசித்த புகைப்படத்தை முன் மாதிரியாக வைத்து, இந்தப் பனிச்சிற்பத்தை உருவாக்கியுள்ளனர்.

பல வண்ண மின் விளக்குகளின் ஒளி அந்தச் சிற்பத்தில் பாயும்போது, வெள்ளை மலைப் பிரதேசத்திலிருந்து, மர்லின் மன்றோவே நேரில் இறங்கி வருவது போல் இந்தச் சிற்பம் இருப்பதாக, பார்வையாளர்கள் சிலிர்க்கின்றனர்.

கடந்தாண்டு அங்கு நடந்த பனிச் சிற்ப திருவிழாவுக்கு, பத்து இலட்சம் பார்வையாளர்கள் வந்திருந்தனர். இந்தாண்டு அதை விட, 20 சதவீதம் கூடுதல் பார்வையாளர்கள் வரக் கூடும் என்றும் அதன் மூலம் அரசுக்கு வருவாய் அதிகரிக்கும் என்றும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## பூனைக்கும் "ஒபிசிட்டி"!



"ஒபிசிட்டி" (obesity) - அதிக உடல் பருமன். இந்த நோய் பெரியவர்களுக்கு மட்டுமல்ல, பிட்சா, பர்கர் சாப்பிடும் குழந்தைகளுக்கும் கூட வந்துவிடுகிறது.

வீட்டில் உள்ளவர்களுக்கு ஒபிசிட்டி வந்தால், அவர்கள் வளர்க்கும் பூனைக்கும் அந்தக் கோளாறு ஏற்படும் என்று அமெரிக்க நிபுணர்கள் தங்கள் ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். வீட்டில் நாய் வளர்த்தால், வீட்டிலுள்ளோர் நடைப்பயிற்சி போகும்போது கூடவே நாய் செல்லும். அதனால் நாய்க்கு இந்த ஒபிசிட்டி, நீரிழிவு போன்ற நோய்கள் வருவதில்லை.

ஆனால் பூனை வளர்த்தால் அது வீட்டைவிட்டு வெளியே போகாது. அப்படியே போனாலும் வீட்டைச் சுற்றி சுற்றியே வரும். நாம் சாப்பிடும்போதெல்லாம் அதுவும் சாப்பிடும். நொறுக்குத் தீனி சாப்பிட்டால் அதற்கும் கொடுக்க வேண்டும். சோபாவில் அமர்ந்து டி.வி. பார்த்தால் அதுவும் உட்கார்ந்து டி.வி. பார்த்தபடி இருக்கும். படுசோம்பேறி என்றால் அது பூனைதான். அத்தோடு அதை வளர்ப்பவரின் சாப்பாட்டுப் பழக்கம், பூனைக்கும் தொற்றுகிறது. அது மட்டுமல்ல, நாய்க்கு வயிறு நிரம்பிவிட்டால் உணவை ஒதுக்கிவிடும். பூனைக்கு அது தெரியாது. எஜமான் சாப்பிட்டுக்கொண்டே இருந்தால், பூனையும் எதையாவது சாப்பிட்டுக்கொண்டே இருக்கும். அதிகமாக சாப்பிடுவது கூடத் தெரியாமல் சாப்பிடும். இந்தக் குணங்களால் மனிதருக்கு வரும் நோய்கள் எல்லாம் பூனைக்கும் வருகிறது. அப்படியே ஒபிசிட்டி நோயும் பூனைக்கு வருகிறது என்கிறது ஆய்வு.

## சிகரெட்டைக் குறைக்க...

சிகரட் பிடிப்பதில் பிராணாயாமத் தத்துவமே அடங்கியிருக்கிறது என்கின்றனர். பிராணன் என்றால் மூச்சு, யாமம் என்றால் ஆட்சி. மூச்சை மெதுவாக இழுத்து, மெது வாக விடும் பயிற்சியால் அமைதி கிட்டுகிறது. சிகரட் பிடிக்கும் போதும் இதுதான் நடக்கிறது. அதனால்தான் சிகரட் பிடித்தால் ஒரு நிம்மதி ஏற்படுகிறது என்கிறார்கள் புகைப்பாளர்கள்.

இந்த சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை விட முடியாமல் தடுமாறுவோர் நம்மிடையே அதிகம் இருக்கிறார்கள். முற்றாக விட முடியாவிட்டாலும், குடிப்பதில் பாதியாவது குறைக்கலாம் என ஒரு ஆங்கிலப்பத்திரிகையில் சங்கிலிப் புகைப்பாளர் ஒருவர் கட்டுரை எழுதியிருக்கிறார்.

அவர் சொல்கிறார்: சிகரட் பிடிப்பதில், பல செயல்கள் கோர்வையாகச் சேர்ந்திருக்கின்றன. ஒவ்வொரு செய்கையையும் கவனித்து உணர்ந்து செய்தால், தானாக சிகரட் பழக்கம் குறையும்.

இப்போது ஒரு சிகரட் பிடிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படும்போது, உடனே, சிகரட்டை எடுத்துப் பற்ற வைத்துவிடக் கூடாது. சட்டைப் பையிலிருந்து சிகரட் பெட்டியை எடுத்துப் பார்த்துவிட்டு, பக்கத்தில் வைத்து விட வேண்டும்.

பிறகு ஒரு நிமிஷம் ஆகிவிட்டதா என்று நேரத்தைக் கவனித்துவிட்டு, பெட்டியைத் திரும்ப எடுத்து அதிலிருந்து சிகரட்டை உருவ வேண்டும். ஆனால், உடனே உதட்டில் வைத்துவிடக் கூடாது. சிகரட்டை பெட்டியிலிருந்து எடுத்தபின் ஒரு நிமிஷம் விரல்களிடையே வைத்திருக்க வேண்டும்.

அதற்குப்பிறகு உதடுகளில் பொருத்திக் கொள்வது.... அதன்பின் ஒரு நிமிடம் கழித்துப் பற்ற வைப்பது.....

இப்படி ஒவ்வொன்றையும் உணர்ந்து, 15 நாளைக்குப் பயிற்சி செய்து பார்த்தால், நிச்சயமாக, 30 தடவை என்பது, பத்துத் தடவைகளாவது குறையும்... என்கிறார் அந்தக் கட்டுரையாளர்.



## மற்றொரு தேசத்துரோகி!




விடுதலைப்புலிகள் எந்த மக்களுக்காக ஆயுதம் ஏந்தினார்களோ, அந்த மக்களையே மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினார்கள் என்பதை பாதிக்கப்பட்ட மக்களின் வாய்மொழியாக கேட்டவள் நான். தமிழீழம் என்ற கனவு கொடூரமாக கலைக்கப்பட்டதற்கு இனவாத இலங்கை அரசாங்கமும், பிராந்திய அரசான இந்திய அரசாங்கமும் எவ்வளவு காரணமோ, அவ்வளவு காரணம் புலிகளும்தான். இந்த உண்மையை வாழ்வுரிமை மறுக்கப்பட்ட மக்கள் எனது செங்கடல் படம் மூலம் சொல்கிறார்கள்.

இதற்கு தார்மீகமான ஊடகமாக இருந்ததற்காக இனத்துரோகி, தேசத்துரோகி இன்னும் எல்லாப் பட்டங்களையும் ஏற்க நான் தயார். ஏனெனில் அனாவசியமாக ஒரு மனித உயிர் சாவதைக் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. I am Pro Life. I dont give a damn, அடித்தட்டு மக்களின் வாழ்வாதைகளுக்கும், இங்கு நடக்கும் அரசியலுக்கும், அது பாடும் போர்ப்பரணிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதைச் சொல்ல எடுத்த முயற்சியே செங்கடல்.

-லீனா மணிமேகலை-


# கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத
# கும்பாபிஷேகப் பெருவி







## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் மகா கும்பாபிஷேப் பெருஞ்சாந்தி விழா இன்று திங்கட்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

கால் நூற்றாண்டுகளாக ஆலயத்தின் புனருத்தாரண பணிகளை நிறைவேற்ற முடியாத காரணத்தால் கும்பாபிஷேக நிகழ்வு நடைபெற முடியாமல் போனது. வடபுலத்திலே இருக்கின்ற ஐந்து ஈச்சரங்களிலொன்றாக விளங்குவது நகுலேஸ்வரம் (கீரிமலைச் சிவன் கோயில்). நகுலேஸ்வர முனிவருக்கு சாப விமோசனம் அளித்த திருத்தலம் என்ற பெருமை எம்பெருமானின் ஆலயத்துக்கு இருக்கின்ற சிறப்புகளிலொன்றாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முத்தரச் சிறப்புகளால் பொலிந்து விளங்குவது நகுலேஸ்வரம். பிதிர்க்கடன் நிறைவேற்றும் அன்பர்களுக்கு தீர்த்த விமோசனம் அளிப்பது பெருமானின் கீரிமலை கண்டகித் தீர்த்தம். இத்தகு வரலாறுச் சிறப்புக்களுடன் விளங்கும் ஆலயத்தில் இன்று இப்பெருஞ்சாந்தி விழா நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

அவனருளால் அவன்தாள் வணங்கி என்பதற்கிணங்க சிவபெருமானாக வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீநகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் கும்பாபிஷேகத்துடன் சைவத் தமிழ் மக்களுக்கும் நிறைந்த சுபிட்சமான வாழ்வு அமைந்து அனைவரும் நல்லவண்ணம் வாழ பெருமானின் திருவருள் ஆசியினை வேண்டி எனது நல்லாசிகளை தெரிவிக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள், ஆதீன முதல்வர்,**
**நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**

## பிரார்த்தனை உரை



கீரிமலை நகுலாம்பிகை சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி திருக்கோவில் இன்று மகா கும்பாபிஷேகப் பெருவிழாவைக் காண்கிறது. இங்கு நடைபெறும் ஜீர்ணோர்த்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா சகல அடியார்களுக்கும் திருவருள் பாலிப்பதாக அமைய அகில உலகில் வாழும் சைவத் தமிழ் மக்களுக்கு சாந்தியும், சமாதானமும் வழங்கி நல்லருள் பாலிக்க பிரார்த்திக்கின்றேன்.

**அ.நகுலேஸ்வரக் குருக்கள்.**

## ஈழத்து நகுலேஸ்வரத்தில் கும்பாபிஷேகம் காண வாரீர்



பிட்டுக்கு மண்சுமந்த பெருமானை மனையாட்டி
கட்டுக்குள் கைகட்டி நின்றானை கணக்கின்றிப்
பிரம்படிகள் பெற்றானை பேசும்திரு வாசகத்தில்
நரம்காத்து வாழ்பவனை தமிழ்காத்து ஆள்வானை
இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைவானை
இடும்பா வனத்தில் இறையாகிக் காப்பானை
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பானை
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்வானை
கங்கைத் தலையினை தருநீலம் உண்டானை
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தானை
கற்றைச் சடையானை கைலாய மலையானை
சுடலைப் பொடியானைச் சுடுகாட்டில் இடப்பானை
கடலை நிகர்த்த கருணை மனத்தானை
காளைக் கொடியானை நகுலாம்பிகை அம்மையை
ஆளும் நாயகனை ஆடலிலே வல்லானை
ஆனைத்தோல் புலித்தோல் அங்கம் மறைத்தானை
ஈழத்து நகுலேஸ்வரத்தில் எங்கள் சிவனை
காலத்தால் அழியாத வரலாற்று நாயகனை
கீரிமலைச் சிவனின் குடநீராட்டு காண வாரீர்!

வர்ணனைக் கலாநிதி, மதுகரவி,
காரை.எம்.பி. அருளானந்தன்.

## நகுலேஸ்வரத்தில் நீராடல்

ஆதி நகுலேஸ் வரன் கோயில்
அரியதோர் கும்ப நீ ராடலம்மா
ஆகம வேத வொலி முழங்க
ஆகும் கும்ப நீ ராடலம்மா
பாதி மதிநதி சடையுடையான்
பார்பதி நகுலாம் பிகைநாதன்
பாடும் பணிதந் தெமையாளும்
நேசனின் கும்ப நீராடலம்மா

காணக் கிடையாக் காட்சியம்மா
கண்பெற்ற பயன் காணமம்மா
உணர்வில் எம்முள் நின்றாடும்
உமைநாயகனாம் நகுலேசர்
பேணுமடியார் பெருமை யெல்லாம்
பேசும்படியே அருளீசன்
காணகத் தருமோர் நீராடல்
கண்டே தொழுவீர் தொழுவீரே!

ச.குகதேவன், தெல்லிப்பளை.


(C/1286)
நவநாகரிகத்திற்கேற்ற புடைவை வகைகள், அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்
கணேசன் சென்ரர்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

(C/1287)
அனைத்து வகையான மின்சார உபகரணங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட
காந்தி எலெக்ரோனிக்ஸ் நிறுவனம்
தொ.பே: 0776847510, 0777213357
காந்தி எலெக்ரோனிக்ஸ்,
227/2, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

இளவரசி சேலைச் சோலை
பட்டுப் புடைவைகளின் சாம்ராஜியம்
திருமணப் புடைவைகளின் களஞ்சியம்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்
(C/1288)
தொ.பே:
021 222 2503

சரவணா
பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின்வீதி),
யாழ்ப்பாணம்.
பிரதான வீ
நெல்லிய
021 226 2
கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(C/12

யாழ்.நகரின் லுமாலா மிதிவண்டியின் ஏக விநியோகஸ்தர்
வெங்கடேஸ்வரா
இல.125, 127,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ஏ-9 வீதியூடாகப் பொதிகளை ஏற்றி, இறக்கும் பணியில் நாணயத்துடன் ஈடுபடும் ஒரே ஒரு ஸ்தாபனம்.
வெங்கடேஸ்வரா ரான்ஸ்போட் சேவிஸ்
021 222 8306
(C/1293)

TILKO JAFFNA C
70/6, கே.கே.எஸ்
யாழ்ப்பாண
021 222 59
(C/1292)

# ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்

## விழா சிறப்பு மலர் - 2012





## மகா கும்பாபிஷேக பெருவிழாக் காணும் கீரிமலை நகுலேஸ்வரர் சிவாலயம்

ஈழநாட்டிலே வடக்கே புனிதம்மிக்க புராதனமான சிவாலயம் நகுலேஸ்வரர் சிவாலயமாகும். கீரிமுகத்தைக் கொண்ட நகுலமுனிவர் இங்கே கோயில் கொண்டு அருளிய சிவபெருமானை வழிபாடு செய்து கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தமாடி கீரிமுகம் மாறப்பெற்ற வரலாறு அற்புதமானது. இங்கு எழுந்தருளிய சிவபெருமானின் பெயர் நகுலேஸ்வரர். அம்பிகையின் பெயர் நகுலாம்பிகை ஆகும். திருக்கோயில் பெயர் நகுலேஸ்வரம் என்பதாகும்.

இச்சிவாலயத்தை ஆதிச் சோழ மன்னனாகிய முசுகுந்தன், நளமகாராஜன், அருச்சுனன், மாருதப் புரவீதவல்லி போன்றவர்களாலும் தவத்தால் பெரிய தவசிரேஷ்ரர்களாலும் வழிபாடு செய்யப்பெற்ற திருத்தலமாகும். தவயாத்திரையை மேற்கொள்ளும் அடியார்களுக்குப் புண்ணிய தீர்த்தமாக அமைந்தது கீரிமலைத் தீர்த்தம்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று கல்லால மரத்தை தவவிருட்சமாகக் கொண்ட நகுலேஸ்வரர் சிவாலயத்துக்கு சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர் திருவூஞ்சல் பதிகம் பாடியுள்ளார். அருணகிரி நாதரும் ஒரு திருப்புகழ் பாடித் துதித்திருக்கிறார். நகுலேஸ்வரர் சிவாலயத்தின் தீர்த்தக்கரையருகே பல அனுபூதிச் செல்வர்களின் சமாதிகளும் காணப்படுகின்றன.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் பெருமதிப்புக்குரிய பக்தரான பேராசிரியர் ச.தனஞ்சயராஜசிங்கம் அவர்கள் "நாவலர் பணிகள்" என்ற நூலை 1969 ஆம் ஆண்டு வெளியிட்டார். அவர் நூலில் காணப்படும் ஆறாம் அத்தியாயத்தில் "நாவலரும் கிலமடைந்த கீரிமலைச் சிவன் கோயிலும்" என்ற கட்டுரை வெளிவந்துள்ளது. இங்கு கீரிமலைச் சிவன் கோயில் பற்றி நாவலர் பெருமான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்துக்கு வடமேற்கே இரண்டு மைல் தூரத்திலுள்ள கீரிமலையிலே ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது. இது போத்துக்கேயரால் இடிபட்டது. கீரிமலையின் அடியினின்றும் சுத்த சலம் ஊற்றெடுத்துக் கடலினுள்ளே பாய்கின்றது. அந்தச் சங்கமம் புண்ணிய தீர்த்தமென்று விசயசித்தனோடு யாழ்ப்பாணம் எங்கும் உள்ள சைவ சமய சனங்கள், விசேட தினங்களிலே அங்கே போய் ஸ்நானச் செய்துகொண்டு இருக்கிறார்கள். அநேகர் அங்கே சங்கற்பஞ்செய்து ஒரு மண்டலம், அரைமண்டலம் ஸ்ஞானம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அநேகர் அந்தியேட்டி, சிரார்த்தம் முதலிய கிரியைகளை அங்கே போய்ச் செய்கிறார்கள். அவர்களெல்லாம் ஸ்நானம் செய்தவுடனே சுவாமி தரிசனஞ் செய்யும் பொருட்டு அங்கே ஒரு கோயில் இல்லையே. யாழ்ப்பாணத்திலே எத்தனையோ இடங்களிலே கோயில் சமீபத்து இருக்கவும், புதிது புதிதாகக் கோயில் கட்டுவிக்கற நம்மவர்கள், எல்லாச் சனங்களுக்கும் பொதுத்தலமாகிய கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவிக்க இதுவரையும் நினையாது என்னவோ?

இவ்வாறு கீரிமலை நகுலேஸ்வரர் திருக்கோயில் புனரமைக்க விஞ்ஞாபனம் செய்தார் நாவலர் பெருமான். இன்று பல திருப்பணி வேலைகள் நடைபெற்று வரும் நகுலேஸ்வரர் சிவால்யம் இன்று ஜீர்ரோத்தாரன மகா கும்பாபிஷேக விழாக் காணவுள்ளது. இத்திருப்பணிக்கு உதவி வழங்குமாறு ஆதீன முதல்வர் இராஜ சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஐயா சிவநேயச் செல்வர்களுக்கு விஞ்ஞாபனம் செய்கிறார். நாவலர் பெருமானின் தவ சக்தி ஈன்றிடும் முன்னதாக ஈண்டும் நடைபெறும் மகா கும்பாபிஷேகம் அனைத்து அடியார்களுக்கும் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமா.

**-சி.தவபாலன்**

## நகுலேசஸ்ய தீர்த்தஞ்ச கர்த்த மாலந்ததைவச திண்டி புண்ய கரந்த்வது புண்டரீக புரந்ததா

இலங்காபுரியின் யாழ்ப்பாணத்திலே வடபாகத்திலே சாகரசங்கம புண்ணிய தீர்த்த கரையினிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றினாலும் திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கோணஸ்வரம், முன்னேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரம் ஆகிய பஞ்ச ஈஸ்வர ஷேத்திரங்களின் ஒன்றானதும், நகுலமுனி முசுகுந்தன், நளன், ஹீராமன், அர்ஜுனன் ஆகியோரால் பூஜிக்கப்பட்டதும், சூதசங்கிதை மச்ச புராணம், ஸ்கந்த புராணம், ஸ்ரீ நகுலகிரி புராணம், யாழ்ப்பாண வைபவமாலை, ஈழமண்டல சதகம், நகுலேசர் மாண்மியம், நகுலமலை குறவஞ்சி ஆகிய தொன்மையான புராணங்களில் சிறப்பாகப் போற்றப்படுகின்ற நகுலேஸ்வரம் பதியில் கோவில் கொண்டு அடியார்களுக்கு அருள்புரிந்து வரும் அருள்மிகு நகுலேஸ்வர பெருமானின் அஷ்டபந்தன சுவர்பந்தன மகா கும்பாபிஷேக வைபவம் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது.

நகுலேஸ்வர ஆலய ஆதீன தர்ம கர்த்தாவாகவும், பிரதான குருவாகவும், சிவசொரூபமாகத் திகழ்பவரும் இராஜ இராஜஸ்ரீ கு.நகுலேஸ்வர குருக்கள் அவர்களும், ஸ்ரீமதி வேதநாயகி அம்மா அவர்களினதும் பெரு முயற்சியால் திருப்பணி வேலைகள் நடைபெற்று அழகிய ஆலயமாக விளங்குகிறது. சரித்திரபுராணம் மிக்க இலத்தலத்தின் மகா கும்பாபிஷேகத்தில் அடியேனும் கலந்துகொள்ளும் பெரும் பாக்கியம் கிடைத்துள்ளதையிட்டு மிகவும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அருள்மிகு நகுலேஸ்வர பெருமானின் இக்கும்பாபிஷேக வைபவத்தில் கலந்துகொள்ளும் அனைத்து அடியார்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் பெருமானின் திருவடியை வணங்கி எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

"ஸர்வே ஜனாஹ சுகினோ பவந்து"

**சிவஸ்ரீ சு.கேதீஸ்வரநாத குருக்கள்,**
**திருக்கேதீஸ்வர ஆலய முன்னாள் குரு, கனடா றிச்மன்ஹில் இந்து ஆலய பிரதம குரு.**


ரெக்ஸ்

...ன வீதி.
...ியடி.
...6 2992
(C/1294)

சிறிராம் ஜுவல்லர்ஸ்
தங்க நகை எதுவானாலும் தர நிர்ணயத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

(C/1289)
193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ சிவம் ரெக்ஸ்ரைல்ஸ்
நவநாகரிக புடைவைகளின் சாம்ராஜ்யம்
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
(C/1290)

V.S.P நல்லெண்ணெய்
பரிமளா ஸ்ரோர்ஸ், 26-ஏ, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4135
021 222 9165
(C/1291)

CITY HOTEL
...ஸ். வீதி,
...ம்.
...969

பூபாலசிங்கம் புத்தகசாலை
அனைத்து துறைசார் புத்தகங்களினையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6693
(C/1295)

சிறிகாளி கிறீம் ஹவுஸ்
சிறப்பு வைபவங்களுக்கு விஷேட விலைக்கழிவு
கட்டுவன் வீதி, மல்லாகம்.
0770870516
(C/1297)

(C/1296)
ஸ்ரீகாந்த் புத்தகசாலை
பல்பொருள் வாணிபம்
501, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஒருபோதும் ஏற்க முடியாது

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கும் விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விதித்த நிபநதனையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமது அங்கத்தவர்களை நியமிக்கப் போவதில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியிருந்தது. எனினும் இவ்விடயத்தில் நெகிழ்வுப்போக்குடன் செயற்படுமாறு த.தே.கூட்டமைப்புக்கு பலர் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக கடந்த சில தினங்களில் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் உத்தியோகபூர்வமற்ற ரீதியில் கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இறுதியில் ஒரு நிபந்தனையுடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்றுவது குறித்து ஆராய்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சம்மதம் தெரிவித்திருந்தது.

ஞாயிறு லங்காதீப பத்திரிகைக்கு தெரியவந்த தகவல்களின்படி, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கலந்துரையாடல்களுக்கு காலவரையறையொன்று அவசியம் என்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிபந்தனையாக இருந்தது. இது தொடர்பான கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூறியிருந்தது.

எனினும், மொத்த வாக்காளர்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெற்ற 4 சதவீத வாக்குகளைவிட அதிக சதவீத வாக்குகளைப் பெற்ற பல கட்சிகள் இருப்பதால் இக்கலந்துரையாடல்கள் முடிவடையும் காலத்தை முன்கூட்டியே கூறமுடியாதென்பது அரசாங்கத்தின் நிபந்தனையாக உள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சிறந்த சாரதி யார் சர்வதேசப் போட்டி

(கொழும்பு)



சிறந்த பார ஊர்திச் சாரதிகளை தேர்ந்தெடுக்கும் சர்வதேசப் போட்டி ஒன்றில் இலங்கையைச் சேர்ந்த ஒருவரும் பங்கு கொள்ளவுள்ளார்.

டிஸ்கவரி சனலினால், அமெரிக்காவில் எதிர்வரும் 13ஆம் திகதி நடத்தப்படும் இந்தப் போட்டியில் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஸ்கொட்லண்ட், அவுஸ்ரேலியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த 8 சாரதிகள் பங்குகொள்ளவுள்ளனர்.

போட்டியாளர்கள் நான்கு கண்டங்களின் அபாயகரமான பிரதேசங்களின் ஊடாக பார ஊர்தியை செலுத்துபவர்களில் சிறந்த முறையில் வாகனத்தை கையாளபவருக்கு முதல் பரிசாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# விமான சேவை இரத்து

(கொழும்பு)



கடும் பனிமூட்டம் லண்டன் ஹித்ரோ விமான நிலையத் தின் ஊடான சகல விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய சிறிலங்கன் விமான சேவையின் இன்றைய யூ.எல். 509 விமான சேவை இன்று திங்கட்கிழமை மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் புறப்படவிருந்த விமானத்தில் பயணிக்கவிருந்த பயணிகள் சிறிலங்கன் விமான சேவையின் 1979 என்ற தெலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி சிறிலங்கன் விமான சேவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் அமெரிக்க விஜயம் இரத்து சிங்கப்பூரில் மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசேட மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குச் செல்ல விருந்ததாகவும், எனினும் இறுதி நேரத்தில் அப்பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இச்சிகிச்சைக்கான மாற்று ஏற்பாடாக தற்போது சிங்கப்பூர் மருத்துவமனை ஒன்று தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக ஜனாதிபதி மிக விரைவில் சிங்கப்பூர் பயணமாகவுள்ளார்.

சிங்கப்பூரில் உள்ள "மவுண்ட் எலிசபெத்" மருத்துவமனையில் ஜனாதிபதி மகிந்த சிகிச்சை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பு மகிந்தவின் ஆலோசகர் சஜின்வாஸ் குணவர்தனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், சிகிச்சைக்காக மகிந்தவுடன் செல்லும் குழுவினருக்கான தங்குமிட வசதிகளைச் செய்யும் பொறுப்பை இலங்கை வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசுக்கு நெருக்கமான கோடீஸ்வர வர்த் தகர் ஒருவர் ஏற்றுக் கொண் டுள்ளார்.

மகிந்த சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவே திட்டமிட்டிருந்த போதிலும் அங்குள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டே சிங்கப்பூர் செல்ல முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும், மகிந்த ராஜபக்ஷ சிங்கப்பூர் செல்லும் திகதி இன்னமும் உறுதியாகவில்லை என்றும் அந்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே அடுத்தவாரம் மகிந்த பாகிஸ்தானுக்கு அதிகார பூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் 9 ஆம் திகதி இஸ்லாமாபாத் செல்லும் அவர் 10 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கூட்டமைப்பைக் கைவிட்டு தெரிவுக்குழுவைச் செயற்படுத்தலாம்



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பங்குகொள்ள விரும்பாவிட்டால் அதனைத் தவிர்த்துவிட்டு ஏனைய கட்சிகளுடன் இணைந்து தெரிவுக்குழுவைச் செயற்படுத்த முடியும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அரசுக்கு அலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அரசாங்கம் அழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பில் ஆராய அனைத்துக்கட்சிக் கூட்டம் ஒன்றை அழைகக் போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் அறிவித்திருந்தார்.


இந்தநிலையில், ஏற்கனவே அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழு இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வு ஒன்றை முன் வைத்துள்ளது.

எனவே இனப்பிரச்சினை தீர்வில் அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் இறுதியறிக்கையை மையமாகக் கொண்டு தீர்வு ஒன்றைக்காண முடியும் என்று வாசுதேவநாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுக்கூட்டங்களில் தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு பங்கேற்கவிருப்ப மில்லையென்றால், அதனை விட்டு விட்டு குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# பணமோசடி ; இருவர் கைது

(கொழும்பு)



பண மோசடியில் ஈடுபட்ட இரு இலங்கையர்கள் இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இலங்கையைச் சேர்ந்த கே.பி. என்னும் முதற்பெயரை உடைய ஒருவர் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டதாகவும் அப்போது இவர் 64 மில்லியன் ரூப்பியா பணத்தையும் 25 போலி தன்னியக்கப் பணப்பரிமாற்று அட்டைகளையும் உத்தியோக பூர்வ புகலிடம் கோருவோருக்கான அடையாள அடடையையும் வைத்தி ருந்தாகவும் பொலிஸார் கூறினர்.

இதே வேளை, இலங்கையைச் சேர்ந்த எம்.கே. என்னும் முதற்பெயரை உடைய ஒருவர் மறுநாள் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர் இந்தோனேஷியாவின் போலி அடையாள அட்டையை வைத்திருந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

# 13 ஆவது திருத்தச்சட்டம் தீர்வு தராது இன ஐக்கியமும் நல்லாட்சியுமே முக்கியம்

## ஜயவர்த்தனபுர பல்கலை. வேந்தர்

(கொழும்பு)

13 ஆம் திருத்தச் சட்டமோ அல்லது அதனைத் தாண்டிய சட்டமோ, வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என புத்திஜீவிகளும், மதத் தலைவர்களும் தெரிவித்துள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் சம உரிமைகளுடன் வாழக்கூடிய நல்லாட்சியை நிறுவுவதன் மூலம் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திருத்தச் சட்டமோ அல்லது அதனைத் தாண்டிய தீர்வுத் திட்டமோ வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையாது என சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தர் பெல்லன்வில விமலரதன தேரர் தெரிவிததுள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டிய அவசியமில்லை.

இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றல், கல்வி, சுகாதாரம், உள்ளிட்ட பல்வேறு துறைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பலவந்தமாக திணிக்கப்படும் தீர்வுத் திட்டங்களில் எந்தத் தரப்பினரும் நன்மை அடையப் போவதில்லை.

தமிழ், முஸ்லிம் மக்கள் இரண்டாம் நிலைப் பிரஜைகளாக கருதப்படக் கூடாது எனவும், அவர்களும் சிங்களவர்களைப் போன்று நடத்தப்பட வேண்டுமெனவும் பெல்லன்வில விமலரதன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதிதாக சட்டங்களை உருவாக்கியோ அல்லது இருக்கும் சட்டங்களை அமுல்படுத்தியோ வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முடியாது என சிரேஷட சட்டத்தரணி எஸ்.எல் குணசேகர தெரிவித்துள்ளார்.

அனைவரும் ஒன்றிணைந்து வாழக்கூடிய நல்லாட்சியை ஏற்படுத்துவதே முக்கியமானது. நாட்டை பிளவுபடுத்தி தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க தூதுக்குழு இன்று வருகிறது உரிமை மீறல் தொடர்பாக பேச்சு

(தொழும்பு)

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடாத்துவதற்காக அமெரிக்காவின் தூதுக்குழு ஒன்று இன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது.


அமெரிக்காவின் போர்க்குற்றங்கள் தொடர்பான தூதுவர் Steven Rapp தலைமையில் வரும் இக்குழுவினர் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து சந்திப்புக்களை நடத்தவுள்ளனர்.

குறிப்பாக பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் அவர் பேச்சுக்களை நடத்தவுள்ளார் என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் 12 ஆம் திகதி அமெரிக்காவின் தெற்காசிய பிராந்தியங்களுக்கான உதவி ராஜாங்க செயலாளர் றொபட் ஓ பிளெக், அமெரிக்காவின் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் ஜனநாயக உரிமைகள் தொடர்பான உதவிசெயலாளர் மரி ஒட்டேரோ ஆகியோர் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இவர்கள், பெரும்பாலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீமானத்தில் அடங்கியுள்ள அம்சங்களை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுக்கு விளக்குவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அகில இலங்கை கபடிக்குழு பயிற்சியில் கௌதமன், டெனிம்சன்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியான கபடிப் போட்டிக் குழுவில் குடாநாட்டில் இரு மாணவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவன் மகாலிங்கம் கௌதமன் (வயது -17) என்ற மாணவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2 ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையைச் சேர்ந்த இந்த மாணவன் பாடசாலை மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் போன்ற போட்டிகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

யாழ். ஹென்றியரசர் கல்லூரி மாணவன் சகாயநாதன் டெனிம்சன் (வயது- 18) என்ற மாணவனும் தெரிவு செய்யப்பட்டவராவார்.

விளையாட்டு அபிவிருத்தி அமைச்சின் கொலின்ரன் விளையாட்டு மைதானத்தில் 24 பேர் கொண்ட போட்டியாளர்களில் இவரும் பயிற்சி பெற்று வருகின்றார்.

இவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (116)





யாழ். உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவிகளின் அணிவகுப்பையும் படங்களில் காணலாம். (137)

## யாழ். இந்துக் கல்லூரியின் 32 ஆவது வீதியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியின் 2012 ஆம் ஆண்டுக்குரிய இல்ல மெய்வல்லுநர் போட்டியின் முதல் நிகழ்வான 32 ஆவது வீதியோட்டம் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது. இந்நிகழ்வு இளநிலைப் பிரிவு, முதுநிலைப் பிரிவு எனும் இரு கட்டங்களாக நடைபெற்றன. முதலாவதாக நடைபெற்ற இளநிலைப் பிரிவு போட்டியை யாழ். இந்துக் கல்லூரியின் இங்கிலாந்து பழைய மாணவர் சங்கத் தலைவர் தி.விவேகானந்தா ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின் நடைபெற்ற முதுநிலைப் பிரிவு போட்டியை யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் சண்.தயாளன் ஆரம்பித்து வைத்தார்.

இப்போட்டியில் இளநிலைப் பிரிவில் பசுபதி இல்லத்தைச் சேர்த்ந்த க.சுபராஜ் (21 m.17s) முதலாவது இடத்தையும், ம.சரண் ஜன் (22m 04s) இரண்டாம் இடத்தையும், சபாபதி இல்லத்தைச் சேர்ந்த வி.நவநீதன் (22m 14 s) மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதேபோன்று முதுநிலைப் பிரிவில் செல்லத்துரை இல்லத்தைச் சேர்ந்த சி.சிவகான் (21m.05s) முதலாம் இடத்தையும், வி.ஜனார்த் தனன் (21m.35s) இரண்டாம் இடத்தையும், காசிப்பிள்ளை இல்லத்தைச் சேர்ந்த இ.ஜெசிந்தன் (22m.03s) மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

## சர்வதேச ஸ்குவாஷ் தரவரிசைப் பட்டியல் இந்திய வீராங்கனை தீபிகா முன்னேற்றம்

சர்வதேச ஸ்குவாஷ் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் இளம் வீராங்கனையான தீபிகா பல்லிகள் முன்னேறி 14 ஆவது இடத்தைப் பிடித்துச் சாதனை படைத்து இருக்கிறார்.

தீபிகாவின் ஸ்வாஷ் வாழ்க்கையில் இது ஒரு புதிய மைல் கல்லாகும். அவர் இதுவரை இந்த இடத்தைப் பெற்றது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் விஸ்பா ஸ்குவாஷ் போட்டிகள் நடைபெற்றது. இதில் பங்கேற்ற தீபிகா இறுதிச் சுற்றை எட்டியதைத் தொடர்ந்து மேற்கண்ட முன்னேற்றத்தை அடைந்து இருக்கிறார். கடந்த வருடம் விஸ்பா போட்டியில் பங்கேற்ற அவர் 3 பட்டங்களை கைப்பற்றினார். இதனால் அவர் சரவதேச தரவரிசையில் 15 ஆவது இடத்திற்கு முன்னேறினார்.

## விக்ரம் ராஜன் கங்கு வெற்றிக்கிண்ணம் ; முதல் சுற்றில் சி.சி. விளையாட்டுக் கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட நான்கு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் ஏற்பாடு செய்துள்ள விக்ரம், ராஜன், கங்கு ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண லீக் சுற்றுப்போட்டியின் முதலாவது ஆட்டத்தில் யாழ்ப் பாணம் ஜொலிஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஆடிய கொக்குவில் சி.சி. விளையாட்டுக் கழகம் வெற்றி பெறறுக் கொண்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத் தப்பட்ட இப்போட்டியில முதலல் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் ஜொலிஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களும் துடுப் பெடுத்தாடி 7 விக்கெட் இழப் பிற்கு 203 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் நிரஞ்சன் 84 ஓட்டங்களையும், ரக்ஸ்மன் 35 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 36 ஓட் டங்களையும், நிருஜன் 15 ஓட் டங்களையும், மணிவண்ணன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கொக்குவில் சி.சி. விளையாட்டுக் கழகத்தின் சார்பில் ராகுலன் 5 ஓவர்கள் பந்து வீசி 49 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ராம்பவன் 6 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட் டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், பங்குஜன் 5 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் சி.சி விளையாட் டுக் கழகம் 27 ஓவர்களில் 204 ஓட்டங்களினை 4 விக்கெட் இழப பிற்கு பெற்று 6 விக்கெட் வித்தி யாசத்தில் கொக்குவில் சி.சி. விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுக்கொண்டது.

இதில் பங்கஜன் 65 ஓட்டங்களையும், ராகுலன் 35 ஓட்டங்களையும், சாம்பவன் 34 ஓட்டங்களையும், உத்தமன் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஜொலிஸ் ஸ்ரார் அணியின் சார்பில் சஞ் ஜீத், தீபன், உமாசுதன், மணி வண்ணன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர். (42)

## ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியல் கோஹ்லி, டோனி இடம் பிடித்தனர்

சிறப்பாக விளையாடிய கிரிக்கட் வீரர்களின் தரவரிசைப் பட்டியலில் இந்திய அணியின் வீராத் கோஹ்லியும், டோனியும் இடம் பிடித்துள்ளனர்.

ஐ.சி.சி. வெளியிட்ட ஒருநாள் கிரிக்கட் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய கிரிக்கட் வீரர்களின் தரவரிசைப் பட்டியலில் 3 ஆவது இடத்தில் கோஹ்லியும், 5 ஆவது இடத்தில் டோனியும் இடம்பெற்றுள்ளனர்.

பந்து வீச்சாளர்கள் பட்டியலில் இந்திய வீரர்கள் யாரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க வீரர் ஹாசிம் அம்லா தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்திலும், டி வில் லெர்ஸ் இரண்டாவது இடத்திலும் உள்ளனர்.

## அசினுடன் டோனி

இந்திய அணியின் வெற்றிக் கப்டனாக வலம் வரும் டோனி, விளம்பர உலகில் விருப்பநாயகனாகவும் திகழ்கிறார்.

சமீபத்தில் பாலிவுட் கவர்ச்சி நாயகி பிபாஷா பாசுவுடன் இணைந்து 'ஷு' விளம்பரத்தில் தோன்றி பரபரப்பு ஏற்படுத்தினார். தற்போது நடிகை அசினுடன் ஜோடி சேர்ந்து இன்னொரு விளம்பரத்தில் கலக்கியுள்ளார்.

இந்திய கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த மிக குறுகிய காலத்தில் அசுர வளர்ச்சி கண்டவர் டோனி. 20 - 20 உலகக் கோப்பை வென்ற பின், இவரது புகழ் பன்மடங்கு உயர்ந்தது. விளம்பர நிறுவனங்கள் இவரைத் தேடி வந்தன. ஒரு நிறுவனத்துக்கு மாடலாகத் தோன்ற பல கோடி ரூபாய் சம்பளமாகப் பெற்றார்.

## இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள்

கரவெட்டி கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று திங்கட்கிழமை 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் கி.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார், சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

◆◆◆

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் கே.கண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொன்னையா, சிறப்பு அதிதியாக ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமாகிய ஐ.சிறிரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

◆◆◆

வடமராட்சி தெற்கு, மேற்கு இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி நவமணி சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.நற் குணலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

◆◆◆

வடமராட்சி கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் கே.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இப் பாடசாலையின் முன்னாள் அதிபர் பி.அருமைச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். (116)





பரமன்கிறாய் அ.த.க பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.தர்மரத்தினம் உரையாற்றுவதையும், இடைவேளையின்போது சிறார்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் காணலாம். (112)

## கூடங்குளம் அனுமின் நிலையத்தை உடனடியாக் செயற்படுத்த வேண்டும்

(புதுடில்லி)

கூடங்குளம் அணுமின் நிலையத்தை உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்று பாளையங்கோட்டையில் நேற்று முன்தினம் நடந்த பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

பொதுக்கூட்டத்தில் மத்திய அமைச்சர் நாராயணசாமி பேசுகையில்.

கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக போராட்டம் எழுந்தபோது பிரதமர் உத்தரவுப்படி இடிந்தகரைக்கு சென்று போராட்டக்காரர்களை சந்தித்து பேசினோம். அப்போது பல குறைகளை எடுத்துக்கூறினார்கள். அதன்பின்னர் பிரதமர் உத்தரவுப்படி தமிழக முதல் அமைச்சரை சந்தித்து பேசினேன்.

அப்போது அவர் என்னிடம் மக்கள் அச்சத்தை போக்க வேண்டியது மத்திய அரசின் கடமை என்று கூறினார். அதனை நான் ஏற்றுக் கொண்டேன். அப்போது நான் தமிழக அரசும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று கூறினேன். அதன்பின்னர் மத்திய அரசின் சார்பில் ஒரு நிபுணர் குழு பேராசிரியர் முத்துநாயகம் தலைமையில் அமைக்கப்பட்டது. இதேபோல் மாநில அரசின் சார்பிலும் ஒரு குழு அமைக்கப்பட்டது.

ஆனால் போராட்டக்காரர்கள் கேட்கும் கேள்விகள், இந்திய-ரஷ்ய நாடுகளின் உடன்படிக்கை மற்றும் முதலீடு தொகை பற்றி கேட்கின்றனர். பாதுகாப்பு பற்றித்தான் அவர்கள் கேட்க வேண்டும். அதனை விட்டுவிட்டு ஒப்பந்தம் பற்றி கேட்கின்றனர். உலகில் எங்கும் இல்லாத அளவுக்கு கூடங்குளம் அணுமின் நிலையம் 4 அடுக்கு பாதுகாப்புடன் உள்ளது. அதனை நிபுணர் குழுவினர் தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எடுத்துக் கூறி உள்ளனர் என்றார்.

## ஸ்பெக்ரம் வழக்கிலிருந்து சிதம்பரம் தள்ளுபடி

(புதுடில்லி)



ஸ்பெக்ட்ரம் வழக்கில் சிதம்பரத்தை சேர்க்க கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டதால், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சற்று நிம்மதி அடைந்துள்ளது. நீதிமன்ற தீர்ப்புகளால் தொடர்ந்து நெருக்கடியை சந்தித்து கொண்டிருந்த காங்கிரசுக்கு இந்தத் தீர்ப்பு சாதகமாக்கியுள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் சிதம்பரத்திற்கு தொடர்பு உண்டு, அவரையும் வழக்கில் சேர்க்க வேண்டுமென்றுகோரி சுப்ரமணிய சுவாமி தாக்கல் செய்த மனுவை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஷைனி நேற்று முன்தினம் தள்ளுபடி செய்தார். மத்திய அரசில் உள்துறை அமைச்சர் என்ற மிக முக்கிய பதவியில் சிதம்பரம் இருப்பதாலும், அவரது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாக தீர்ப்பு இருக்கும் என்பதாலும் இந்த வழக்கு முக்கியமாக கருதப்பட்டது.

## திருப்பதி கோவிலில் பெண்கள் இறுக்கமான ஆடை அணியத் தடை

கடந்த சில ஆண்டுகளாக திருப்பதி கோவிலுக்கு வரும் சில பெண்கள் இறுக்கமான உடை அணிந்து வருகிறார்கள். இதேபோல் சில இளம் பெண்கள் துப்பட்டா இல்லாமல் சுடிதார் அணிந்து வருகிறார்கள். இனி இதுபோல் ஆடை அணிந்து வரும் பெண்களை தரிசனத்திற்கு அனுமதிக்க மாட்டோம். பெண்கள் கண்டிப்பாக புடவை அல்லது துப்பட்டாவுடன் கூடிய சுடிதார் அணிந்துதான் கோவிலுக்கு வரவேண்டும் என திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி எல்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தள்ளார்.

ஆண்கள் வேட்டி-சட்டை, அல்லது பேண்ட்-சட்டை அணிந்துதான் தரிசனத்திற்கு வரவேண்டும். இந்த ஆடை கட்டுப்பாடு சில மாதங்களுக்கு முன்பே கொண்டு வரப்பட்டது. தற்போது அதை தீவிரமாக அமுல்படுத்த திட்டமிட்டுள்ளோம். ஆடை கட்டுப்பாட்டை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக வெளியேற்றப்படுவார்கள் என்றார்.

திருப்பதியை சேர்ந்த திரிதண்டி சின்ன ஜீயர் சுவாமிகள் தெரிவிக்கையில், திருப்பதி கோவில் தற்போது நள்ளிரவு வரை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழுமலையானுக்கு போதிய ஓய்வு கிடைக்காமல் போய் விடுகிறது. எனவே கோவிலை தினமும் இரவு 10 மணிக்கு மூட வேண்டும். இதுபற்றி தேவஸ்தான நிர்வாகிகளிடம் கலந்து பேசி விரைவில் முடிவு எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## இந்திய நிறுவனங்களில் அயல்நாட்டு முதலீடு அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்திய நிறுவனங்கள் ஜனவரி மாதத்தில் வெளிநாடுகளில் மேற்கொண்ட முதலீடு 79.70 கோடி டொலராக (3,985 கோடி ரூபாய்) குறைந்துள்ளது.

இந்த முதலீடு கடந்த 2011 டிசம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டை விட 45 சதவீதம் (146கோடி டொலர்-7,300 கோடிரூபாய்) குறைவாகும் என்று ரிசர்வ் வங்கி புள்ளி விபரம் வெளியிட்டுள்ளது.

ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்த 418 முதலீடுகளில் டாட்டா குழுமம், ஐ.எல் மற்றும் எப்.எஸ், லூபின் ஆகிய மூன்று நிறுவனங்களே அதிக அளவிலான முதலீடுகளை மேற்கொண்டுள்ளன.

டாட்டா கம்யூனிகே'ன் நிறுவனம் சிங்கப்பூரைச் சேர்ந்த அதன் துணை நிறுவனமான வி.எஸ். என்.எல்.இன்டர்நேஷனல் பி.டி.இ. நிறுவனத்தில் போக்குவரத்து, சேமிப்பு மற்றும் தொலைத் தொடர்பு சேவைகளுக்காக 7.67 கோடி டொலரை (388 கோடி ரூபாய்) முதலீடு செய்துள்ளது.

மேலும் டாட்டா குழுமத்தைச் சேர்ந்த மற்ற நிறுவனங்களான டாட்டா கெமிக்கல்ஸ்,, டாட்டா மோட்டார்ஸ் மற்றும் டாட்டா பவர் நிறுவனங்கள் முறையே சிங்கப்பூர், பூட்டான், பிரித்தானியா மற்றும் மொரீயஸ் ஆகிய நாடுகளில் உள்ள அவற்றின் துணை மற்றும் கூட்டு நிறுவனங்களில் மொத்தம் 73 லட்சம் டொலர் முதலீடு செய்துள்ளன.

அடிப்படை கட்டமைப்புத் துறையில் ஈடுபட்டு வரும் ஐ.எல் மற்றும் எப்.எஸ் குழுமம், அமெரிக்காவைச் சேர்ந்த அதன் துணை நிறுவனமான ஐ.என்.டி.எல். மற்றும் பி.டி.இ நிறுவனத்தில் 4.82 கோடி டொலரை முதலீடு செய்துள்ளது.

இக்குழுமத்தின் மற்றொரு நிறுவனமான ஐ.எல் மற்றும் எப்.எஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம், பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த அதன் துணை நிறுவனத்தில் நிதி, காப்பீடு, ரியல் எஸ்டேட், வர்த்தக நடவடிக் கைகளுக்காக 2.42 கோடி டொலரை முதலீடு செய்துள்ளது.

மேலும் மருந்து பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் லூபின் நிறுவனம் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த, லூபின் ஹோல்சைன் பி.வி. என்ற அதன் துணை நிறுவனத்தில் 4 கோடி டொலரை முதலீடு செய்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான 10 மாத காலத்தில் இந்திய நிறுவனங்கள் அயல்நாடுகளில் மேற்கொண்ட முதலீடு 2,610 கோடி டொலரை (1 இலட்சத்து 30 ஆயிரத்து 500 கோடி ரூபாய்) எட்டியுள்ளது.

இது சென்ற 2010-11ஆம் நிதியாண்டில் 1,943 கோடி டொலராக (97 ஆயிரத்து 150 கோடி ரூபாய்) இருந்தது என்று ரிசர்வ் வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

## தேர்தல்களில் போட்டியிடமாட்டேன்

-சரத்பவார்-

(மும்பை)




இனி வருங்காலத்தில் லோக்சபா தேர்தல்களில் போட்டியிடப் போவதில்லை என்பதில் உறுதியாக உள்ளேன். ஆனால், பொது வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறப்போவதில்லை என தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவரும், மத்திய அமைச்சருமான சரத்பவார் தெரிவித்தார்.

தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவரும், மத்திய அமைச்சருமான சரத்பவார் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில் நான் 2009 ஆம் ஆண்டு நடந்த லோக்சபா தேர்தலிலே போட்டியிட விரும்பவில்லை. ஆனால், கட்சித் தொண்டர்களின் நிர்ப்பந்தம் காரணமாக போட்டியிட்டேன். பல ஆண்டுகளுக்கு முன்பே வாக்குமுறை அரசியலில் இருந்து விலக முடிவு செய்திருந்தேன்.

ஏனெனில், அப்போதே எனது மகள் சுப்ரியா சுலே எனது பாராமதி தொகுதியை கவனிக்கத் தொடங்கி விட்டார். நான் 1962ஆம் ஆண்டு முதல் தேர்தலில போட்டியிட்டு வருகிறேன். எல்லா தேர்தலிலும் வெற்றி தான். தற்போது அதிலிருந்து விடைபெற முடிவு செய்துள்ளேன். ஆனால், இந்த முடிவு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அர்த்தம் கொள்ளக்கூடாது. நான் தொடர்ந்து கட்சிப் பணிகளிலும், சமூக நடவடிக்கைகளிலும் என்னை அர்ப்பணிப்பேன். வருங்காலத்தில் ராஜ்யசபா உறுப்பினராவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. அடுத்த லோக்சபா தேர்தலுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் உள்ள நிலையில், இப்போதே என் முடிவை அறிவித்தது ஏன் எனில், என் கட்சித் தொண்டர்கள் இப்போதே எனக்குப் பதிலாக, தகுதிவாய்ந்த மாற்றுத் தலைவரை தேர்வு செய்யத்தான் என்றார்.

## பெண்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடுபவர் ஜெயலலிதா

பன்னீர்ச்செல்வம் புகழாரம்



(சென்னை)

பெண்கள் முன்னேற்றத்திற்கு பாடுபடுபவர் முதல்வர் ஜெயலலிதா என்று அமைச்சர் ஓ.பன்னீரசெல்வம் கூறினார். நேற்று முன்தினம் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள மீனாட்சி கல்லூரியில் ''கல்லூரி தினம்'' கொண்டாடப்பட்டது. விழாவில் அவர் உரையாற்று கையில், முதல்வர் ஜெயலலிதா பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடுபவர். அதற்காக பல நல்ல திட்டங்களை தீட்டி உள்ளார். ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டம் மூலம் 10ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூபா 25 ஆயிரமும், 4 கிராம் தங்கமும், பட்டதாரி பெண்களுக்கு ரூபா 50 ஆயிரமும், 4 கிராம் தங்கமும் வழங்கி உள்ளார். இந்த திட்டம் எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத திட்டம் ஆகும். பெண்கள் சமுதாயத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக மகளிர் காவல் நிலையங்கள், கொமாண்டோ படைகளை உருவாக்கி உள்ளார். பெண்களை ஏற்றம் அடைய செய்தவர் முதல்வர் ஜெயலலிதா. ஆசிரியர் பணி என்பது தூய்மைப் பணி ஆகும். நாட்டில் மாணவிகள் நல்ல நிலையில் உயர வேண்டும். ஆசிரியைகள் பணி சிறக்க வேண்டும். மாணவிகள் உலக நடப்புகள் பற்றி தெரிந்திருக்க வேண்டும் என்றார்.

## விஜயகாந்த் இடைநிறுத்தம் ஜனநாயகத்திற்கு புறம்பானது

-கருணாநிதி-

(சென்னை)

விஜயகாந்த் நீக்கப்பட்டமை ஜனநாயகத்துக்கு புறம்பானது என தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி அண்ணா அறிவாலயத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

தி.மு.க.வில் கடந்த முறை 1 கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர். இந்த முறை உறுப்பினர் சேர்க்கையின் ஆர்வத்தை பார்க்கும் போது அதையும் தாண்டும் என நினைக்கிறேன்.

சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் தி.மு.க. பிரசாரப பணிகள் வலுவானதாகவே இருக்கும்.

தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெறும் வகையில் எங்களது பிரசாரம் அமையும்.

விஜயகாந்த் சட்டசபையில் இருந்து 10 நாட்கள் இடை நிறுத்தப்பட்டது.

அ.தி.மு.க. அரசு ஜனநாயகத்துக்கு புறம்பாகவும், ஜனநாயக மரபுகளை உடைக்கும் வகையில் எப்படி செயறபடுகிறது என்பதை இது காட்டுகிறது என்றார்.



உலகச் செய்திகள்

# அரசு - இராணுவ முறுகல் பாகிஸ்தானில் வலுக்கிறது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் மெமோகேட் விவகாரத்தில், அரசுக்கும் இராணுவத்திற்கும் இடையில் ஏற்பட்ட மோதல், சமீபத்தில் தான் சிறிது, சிறிதாக தணிக்கப்பட்டது. இந்நிலையில், இராணுவ நிலங்கள் மற்றும் கன்டோன்மென்ட்டுகள் துறைக்குத் தலைவராக, இராணுவ உயர் அதிகாரியை நியமிப்பதா, அல்லது அரசு சார்பில் குடிமை அதிகாரியை நியமிப்பதா என்பதில் தற்போது மோதல் எழுந்துள்ளது. அத்துறைத் தலைவர் அதர் உசேன் ஷாவின் பதவிக் காலம், இம்மாதம் 20ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து, தாரிர் மசூத் என்ற இராணுவ உயர் அதிகாரியைத் தலைவராக நியமிக்கும்படி இராணுவம், பிரதமருக்குக் கடிதம் அனுப்பியதாகத் தகவல் வெளியானது.

ஆனால், இதை மறுத்த பிரதமர் அலுவலக அதிகாரிகள், குடிமை அதிகாரி தான் அத்துறைத் தலைவராக நியமிக்கப்படுவார் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். மீண்டும் இரு அமைப்புகளுக்கும் இடையில் இவ்விவகாரத்தால் மோதல் ஏற்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பொருளாதாரம் மீண்டெழுகிறது

## – அமெரிக்க ஜனாதிபதி

அமெரிக்கப் பொருளாதாரம் உறுதியாகவும், வேகமாகவும் மீண்டெழுவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த ஜனவரி மாதம் 2.5 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவானதால், வேலையின்மை 8.3 சதவீதமாகக் குறைந்துள்ளதாக புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் 2.57 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன.

வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவு குறைந்துள்ளது. ஒட்டு மொத்தமாக கடந்த 23 மாதங்களில் 37 இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

இந்த எண்ணிக்கையில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாம். இன்னும் நிறைய அமெரிக்கர்கள் வேலை தேடி வருகின்றனர் அல்லது தற்போதுள்ளதை விட அதிக வருமானம் தரும் வேலையை தேடுகின்றனர்.

எனினும் பொருளாதாரம் வேகமாகவும் உறுதியாகவும் மீண்டு வருகிறது. இந்நிலை தொடர நம் சக்திக்கு உட்பட்ட எல்லாவற்றையும் கையாள வேண்டியுள்ளது.


அதே நேரத்தில் மீண்டும் மந்த நிலைக்கே இழுத்துச் செல்லும் கொள்கைகளுக்குத் திரும்ப முடியாது. இந்த மாதக் கடைசியில் 16 கோடி அமெரிக்கர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்கை நீடிக்க வேண்டும்.

அவர்களுக்கான வரி விலக்கு ஏற்கனவே இரண்டு மாதம் நீடிக்கப்பட்டது. வரி விலக்கையும், வேலையின்மை கால காப்பீட்டையும் மேலும் நீட்டிக்க வேண்டியுள்ளது.

அமெரிக்க உற்பத்தியை அதிகரிக்க, வெளிநாடுகளில் பணியை ஒப்படைக்கும் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் வரி விடுமுறையை இரத்துச் செய்ய வேண்டும்.

இங்கேயே ஆலைகள் அமைத்து, வேலைகளை உருவாக்கும் நிறுவனங்களுக்கு விரி விடுமுறையை அளிக்க வேண்டும். இதுவே அர்த்தமுள்ளதாக இருக்கும் என்றார்.

# குவைத்தில் நாடாளுமன்றத்தேர்தல் எதிர்க்கட்சிகள் அமோக வெற்றி



குவைத்தில் நடைபெற்றத் நாடாளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

50 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் 34 இடத்தை இஸ்லாமிஸ்ட் தலைமையிலான எதிர்க்கட்சி கைப்பற்றியுள்ளது.

ஆளும் கட்சியின் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஊழல் புகார் கிளம்பியதே ஆளும் கட்சியின் படுதோல்விக்குக் காரணம் எனத் தெரிகிறது.

இதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிராக போராட்டம் நடத்தியதில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பிரதமரின் மோசடிகளை எதிர்த்து ரஷ்யாவில் மாபெரும் பேரணி

ரஷ்யாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முறைகேடுகள் நிகழ்ந்ததாக விளாடிமிர் புடினை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.


கடந்தாண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி ரஷ்யாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் தற்போது பிரதமர் விளாடிமிர் புடினின் ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சி பல மோசடிகளைச் செய்து வெற்றி பெற்றதாக கூறி மக்களும், எதிர்க்கட்சிகளும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

டிசம்பர் மாதம் மட்டும் புடினுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் திரண்டு பேரணிகள் நடந்தன. இந்நிலையில் மூன்றாவது முறையாக தலைநகர் மாஸ்கோவில் ஆயிரக்கணக்கானோர் புடினை எதிர்த்து கோஷம் எழுப்பியபடி பேரணி நடத்தினர்.

ஆதரவுப் பேரணியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருக்கலாம் என ஊடகங்கள் தெரிவித்துள்ள நிலையில், 23 ஆயிரம் பேர் தான் வந்தனர் என மொஸ்கோ காவல்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எதிர்ப்புப் பேரணியில் 90 ஆயிரம் பேர் கலந்து கொண்டதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# செவ்வாயில் கடும் வறட்சி



அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வு நடத்தி வருகின்றனர். அங்கு வெட்டி எடுத்து வரப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்த போது அங்கு தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் தெரிந்தன. எனவே, அங்கு உயிரினங்கள் வாழ முடியும் என நம்பினர்.

அதைத் தொடர்ந்து கடந்த 2008ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட மண் மாதிரிகளையும், செயற்கைக் கோள் அனுப்பிய போட்டோக்களையும் இங்கிலாந்து விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

3 வருட ஆய்வுக்கு பிறகு தற்போது உயிரினங்கள் வாழ செவ்வாய்க் கிரகம் தகுதியற்றது எனக் கண்டறிந்துள்ளனர். ஏனெனில், அங்கு 60 கோடி ஆண்டுகளாக கடும் வறட்சி நிலவுகிறது. எனவே, அங்கு உயிர் வாழ போதிய அளவு தண்ணீர் இருக்க வாய்ப்பில்லை.

செவ்வாய்க் கிரகத்தின் மேற்பகுதியில் ஐஸ் கட்டிகள் படர்ந்துள்ளன. அதனால்தான் அங்கு தண்ணீர் இருப்பதாகக் கருதப்பட்டது. அவை தவிர மற்ற பகுதிகளில் வறட்சி நிலவுவதால் தண்ணீர் இருக்க வாய்ப்பே இல்லை. எனவே, அங்கு உயிரினங்கள் வாழக்கூடிய சூழ்நிலை மற்றும் தகுதி இல்லை என தீர்க்கமான முடிவுக்கு வந்துள்ளது.

இந்தத் தகவல் ஆய்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்புச் செய்திகள்

கோவில் விக்கிரகங்கள், திரு வாசி என்பன விற்பனை செய்யும் ஸ்தாபனத்திற்கு பணிபுரிய பெண் பிள்ளைகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 274, K.K.S. Road, jaffna. அல்லது 0776184353 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கிரீன்விச் உயர்கல்வி நிறுவனம் தனது யாழ்ப்பாணக்கிளையில் பணியாற்ற பின்வரும் பதவிகளுக்கு பணியாளரை நியமிக்க இருக்கின்றது. Manager, Receptionist, studant conselor, Marketion Trainees ஆர்வமுள்ளவர்கள் எதிர் வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை 39,3சன Lane, power house road, jaffna என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். குறிப்பு, என்ன பதவிக்கான விண்ணப்பம் என்பதை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

நெல்லியடியில் இயங்கும் ரஜனிஸ் ஸ்ருடியோவுக்கு வடிவமைப்பாளர் தேவை. அத்துடன் அழகுக்கலை நிபுணரும் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777388275, 0727388275 இற்கு தொடர்பு கொள்ளவும்.

திருநெல்வேலியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு கொத்து ரொட்டி, காலைச் சிற்றுண்டி வகை, றோல்ஸ், பற்றீஸ் என்பன தயாரிப்பதற்கு உதவியாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0771331784 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ். நகரில் உள்ள குளிர்பான நிலையத்தில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை, ஆர்வமுள்ளவர்கள் 0776487264 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் புடைவைக்கடைக்கு, மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண்பிள்ளைகள் வேலைக்குத் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் 0772850753 இற்கு தொடர்பு கொள்ளவும்.

Green Grass Hottel & Restaurant இல் இரவு, பகல் வேளைகளில் கடமையாற்ற காவல் உத்தியோகஸ்தர் தேவை. ஆர்வமுள்ளவர்கள். இல 33, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் அல்லது 0212224385, 0212221686 இற்கு தொடர்பு கொள்ளவும்.

கொழும்பில் வீடுகளுக்குச் சென்று நோயாளர்/ வயோதிபரைப் பராமரிப்பதற்கு பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத பெண் தாதியர்/ உதவியாளர் தேவை.. ஆர்வமுள்ள 18-45 வயதுக்கு உட்பட்டவர்கள் 0714405303 அல்லது 0755930708 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வலம்புரி பத்திரிகை நிறுவனத்தில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தேவை. தகமையும், ஆர்வமும் உள்ள இருபாலாரும் வலம்புரி, இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.

மலேசியாவில் மிக நீண்ட காலமாக வசித்துவரும் யாழ்ப்பாணத் தமிழ்க் குடும்பத்தைச்சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிக்கக் கூடிய பெண் தேவை. போக்கு வரத்துக்காக செலவுகள் மற்றும் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும். 30-40 வயதிற்கு உட்பட்ட பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0772378047 இற்கு தொடர்பு கொள்ளவும்.

படித்த கௌரவமான சிறிய குடும்பம் ஒன்றுக்கு தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 30 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட பணிப் பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0777260974, 0779672613 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஞானமைஸ் ஹொட்டேலுக்கு Rcstaurant managar, Waiters & waitres, front office superisor,Receptionist, cook (chiness, indian) pastry chef ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பதாக Gnanams Hotel (pvd)ltd, 299,301 clock tower road, jaffna என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். மேலதிக தகவல்களுக்கு 0770723261, தொலைநகல் 0212220631 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மலேசியாவில் வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை. தங்குமிடம், மருத்துவம், உணவு இலவசம், 12 மணிநேர வேலை, போக்குவரத்து இலவசம், 2 வருட ஒப்பந்தம் 30 000 ரூபா சம்பளம். ஆர்வமுள்ளவர்கள் எக்ஸ்போ இன்டர்நெஷ்னல், F31, பீபலஸ் பார்க் கொழும்பு-11 அல்லது 0112326762, 0112347760 இங்கு தொடர்பு கொள்ளவும்.

Graphics Designing Photoshop இல் அனுபவம் உள்ளவர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0770266746 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மலையகத்திலுள்ள சிவாலயத்துக்கு ஐயர் ஒருவர் உடனடியாகத் தேவை. தனிநபரோ/ குடும்பமாகவோ தங்குவதற்கு வசதிகள் செய்து தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் 0777392369 இற்கு தொடர்பு கொள்ளவும்.

Sales/ Marketing executive தேவை. ஆர்வமுள்ள இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். மேலதிக கொடுப்பனவுகள், வெளிநாட்டு சுற்றுலாக்கள் மேலும் பல சலுகைகள் உண்டு. ஆர்வமுள்ளவர்கள் 0773439493, 0775675075 அல்லது No14, shathya Building, 1st cross street vavuniya இற்கு தொடர்பு கொள்ளவும்.

World Trate Centre இல் இயங்கும் விளம்பர நிறுவனம் ஒன்றிற்கு மேற்பார்வையாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0773504464 இற்கு தொடர்பு கொள்ளவும்.

அலுமினியம் வார்ப்பு வேலைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் உடனடியாகத் தேவை. ஆற்றலும், ஆர்வமும் உள்ளவர்கள் 0776602583 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# கிழக்கில் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தாவினர்

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கையைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பலர் நேற்றுமுன்தினம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.

கிழக்கில் இடம்பெற்ற சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்வுகளைத்தொடர்ந்து இப்புதிய அங்கத்துவர்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இணைந்துள்ளனர்.

குறிப்பாக கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளின் தீவிர ஆதரவாளர்களாயிருந்த மட்டக்களப்பு வந்தாறுமூலை கிராமத்தைச் சேர்ந்த 250 பேர் சிறிலங்கா சுதந்திர கட்சியில் இணைந்தனர்.

வந்தாறுமூலை காளி கோயில் முன்றலில் நடைபெற்ற வைபவத்தில் கல்குடா தொகுதி சிறிலங்கா சுதந்திர கட்சி பிரதம அமைப்பாளர் டி.எம்.சந்திரபாலவிடமிருந்து கட்சியின் அங்கத்துவ



அட்டைகளைப் பெற்று இவர்கள் சிறிலங்கா சுதந்திர கட்சியில் இணைந்து கொண்டனர். இதற்கான நிகழ்வு நேற்று முன்தினம்மாலை இடம் பெற்றது. இதன்போது கட்சியின் பிர[illegible]கர்கள் சிலர் உரை நிகழ்த்தினர்.

# அநுராதபுரம் கண்காட்சி; பல்லாயிரக்கணக்கில் மக்கள்



அநுராதபுரம் மாவட்டத்தின் தந்திரிமலையிலுள்ள ஓயமடுவ கிராமத்தில் நடைபெற்றுவரும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் கடல் போல் திரண்டவண்ணமுள்ளனர்.

ஆறாவது வருடமாக நடைபெற்றுவரும் இத்தேசியக் கண்காட்சி ஓயமடுவ கிராமத்திலுள்ள 600 ஏக்கர் நிலப்பரப்பில் பாரியளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கண்காட்சி எதிர்வரும் 10ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.


இப்பகுதியைச் சூழவுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், வீதி அபிருத்திக்காக 30,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு நிரந்தரமான 10 கட்டடங்களை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தின் விலாச்சியா பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட ஓயமடுவ கிராமத்தில் சுமார் 6,000 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு 700 மில்லியன் ரூபா செலவில் பல மின்சார விநியோகத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

"தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியில் அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சிக்கு விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஊடக அனுசரணை வழங்கியுள்ளது.

# காய்களை பழமாக மாற்றுவது எப்படி

(கொழும்பு)



சர்வதேச விதிமுறைகளைப் பின்பற்றி சுகாதாரமுறைப்படி பழவகைகளைப் பழுக்கவைப்பது எப்படி என்று விவசாயிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் விளக்கமளிக்கப்படவிருக்கிறது. உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்காத வகையில் பழவகைகளை பழுக்க வைப்பது தொடர்பாக வர்த்தகர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் விளக்கமளிக்கும் வகையிலான கருத்தரங்குகளை நடாத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

உணவு சட்டத்தின் பரிந்துரைக்கு அமைய எத்தரல் எனும் இரசாயனத்தின் வாயுவை பயன்படுத்தி பழவகைகளை பழுக்க வைக்க முடியும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் அநேகமானவர்கள் பழவகைகளை பழுக்க வைப்பதற்கு கார்பைட் கற்களை பயன்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பழுக்க வைக்கப்படும் பழவகைகளை உட்கொள்வதால் உடல் நலத்திற்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதென கண்டறியப்பட்டுள்ளது.

இதனைக்கருத்திற்கொண்டு உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்காத வகையில் பழவகைகளை பழுக்க வைப்பது தொடர்பாக பழவகை இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு செய்கையாளர்களுக்கு விளக்கமளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# கட்சியை மறு சீரமைக்க ஐ.தே.க.கட்சி தயாராகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியினை மீண்டும் மறு சீரமைப்புச் செய்து முன்னணிக் கட்சியாக கட்டியெழுப்பும் நோக்குடன் புதிய வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முடிவு செய்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினை மீண்டும் கட்டி எழுப்புவது தொடர்பான புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.இதற்கமைய சகல பிரதேச அமைப்பாளர்களின் நடவடிக்கைகளுக்கு இலக்கு ஒன்று நிர்ணயிக்கப்படவுள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுச்சுழல் பாதுகாப்பு முன்னணியில் இலங்கை

(கொழும்பு)

சுற்றுச்சுழல் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் கரிசனை காட்டும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னணியில் உள்ளது. என்று அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. இலங்கையின் ஒட்டு மொத்த சூழலியல் வெளிப்பாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக உலகளாவிய சூழலியல் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் யேல் பல்கலைகழகம் இணைந்து தயாரித்துள்ள இந்த வருடத்துக்கான சூழலியல் வெளிப்பாட்டு சுட்டெண் தரப்படுத்தலில் இலங்கை 55ஆவது இடத்தை பெற்றுள்ளது.

இதற்கான தரப்படுத்தலில் அமெரிக்கா 49 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

சூழலியல் சுகாதாரம் மற்றும் புவிகட்டமைப்பின் செயற்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு 132 நாடுகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

# கூட்டமைப்பைக் கைவிட்டு தெரிவுக்குழு மூலம் தீர்வு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினைப் புறந்தள்ளிவிட்டு தெரிவுக்குழு ஊடாக அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது குறித்து அரசு ஆராய்ந்துவருவதாக சிங்கள நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கும் யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றியே தீர்வுத் திட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு பிரதிநிதிகளை நியமிக்குமாறு அரசாங்கம் பல தடவைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒரு குழுவின் தமாதத்திற்காக தீர்வுத் திட்ட முயற்சிகளை கைவிட முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

# மும்மொழிச்சங்கம் விரைவில் வடக்கிலும்


(கொழும்பு)

අ அ A

வடபகுதி அரச ஊழியர்கள் மட்டத்தில் மும்மொழித் தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்குடன் பிரதேச வாரியாக மும்மொழிச்சங்கங்கள் உருவாக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்கு அமைய ஏற்கனவே, நாடளாவிய ரீதியாக 60 சங்கங்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய மொழிப் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அரச ஊழியர்களுக்கு மட்டுமல்லாது எதிர் காலத்தில் இந்தத் திட்டத்தை பொதுமக்களுக்கு இடையேயும் விஷ்தரிப்பது குறித்து ஆராயப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சிவனொளிபாதமலை யாத்திரை; இலட்சக்கணக்கில் பக்தர்கள்



(கொழும்பு)


சுதந்திர தின விடுமுறையுடன் கூடிய வார இறுதி நாட்கள் என்பதால் சிவனொளி பாதமலைக்குச் செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது.

வாகன தரிப்பிடங்களிலும், நல்லத்தண்ணியிலிருந்து சுமார் ஒன்பது கிலோமீற்றர் தொலைவிலும் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக நல்லத்தண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகளவான வாகனங்கள் நல்லத்தண்ணி நகருக்கு செல்வதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் கூறினார். சாரதிகள் ஒரு ஓடு தளத்தின் ஊடாக மாத்திரம் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இம்முறை சிவனொளிபாதமலைக்கான யாத்திரை பருவக்காலம் ஆரம்பமானதில் இருந்து இப்போதே அதிகளவான யாத்திரிகர்கள் நல்லத்தண்ணி நகரை சென்றடைந்துள்ளனர்.

விடுமுறை நாட்களுடன் நாளை செவ்வாய்க்கிழமை பூரணை தினம் வருவதால்மேலும் இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் சிவனொளிபாத மலைக்கான யாத்திரையை மேற்கொள்வார்கள் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



இலங்கையின் 64ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சிறப்பு பூசை வழிபாட்டில் பங்கேற்றார்.

அனுராதபுரம் கதிரேசன் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அரியாலை - நாவலடிக்கும் இராஜதந்திரிகள் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக அறிந்து கொள்வதற்காக நேற்று யாழ்.வருகை தந்திருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழுவினர் நேற்று நண்பகல் 2.30 மணியளவில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட அரியாலை - நாவலடிப்பகுதிக்கு விஜயம் செய்து, மக்களின் தேவைகள் தொடர்பாக அரச அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நாவலடி (ஜே/90) கிராம அலுவலர் பிரிவுக்கு வருகை தந்த இக்குழுவினர், இந்திய நிதியுதவியில் நடைபெறும் வீட்டுத்திட்டம், குடிநீர், வீதி அபிவிருத்தி, மின்சாரம், மருத்துவ வசதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும், அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும், அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் ஆகியோரிடம் விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர்.

நாவலடி கிராம அலுவலர் பணிமனை மற்றும் நாவலடி பிரதேச வைத்தியசாலைக்கு வருகை தந்த இக்குழுவினரை ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் கணேஸ், நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் சுரேந்திரநாதன் ஆகியோர் வரவேற்றனர். மேற்படி பகுதியைப் பார்வையிட்ட குழுவினர் அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடினர். (26)

## ஜனாதிபதியின்...

கொள்ளாமல் விட்டால், ஜனாதிபதியுடன் மட்டுமல்லாது, மக்கள் இடையேயும் அந்நியப்பட்டு விடுவோம். அத்துடன், தெரிவுக் குழுவில் பங்கேற்கமுடியாதெனக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை, ஜனாதிபதிக்கு எரிச்சலையூட்டியுள்ள நிலையில், வடமாகாண அபிவிருத்தி குறித்த கலந்துரையாடலில் பங்குபற்றாமல் விடுவது மேலும் எம்மை அந்நியமாக்குமெனக் கூட்டமைப்பின் ஒரு சாரார் தெரிவித்துள்ளனர்.

மாறாக, அந்நியப்பட்டாலும் பறவாயில்லை அபிவிருத்தி மீள்மதிப்பீட்டுக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளக்கூடாதென மறுசாராரும் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, திருகோணமலையில் நடந்த கூட்டமைப்பின் பயிற்சி செயலமர்வில் சிலர் கலந்துகொள்ளாததும், இந்தக் கருத்து மோதலின் விளைவினாலேயே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தெரிவுக்குழுவில்....

தெரிவுக்குழுவில் நாம் பங்குகொள்ளவேண்டும் எனவும் அழைப்பு விடுக்கிறார்கள். நாம் வரவில்லை என ஏன் புலம்புகிறார்கள்? தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இடம் பெறாவிட்டால் அதில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் பிரயோசனமற்றதாகிவிடும் என்பதே இதற்குக் காரணமாகும். கூட்டமைப்பை விட்டுவிட்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நீங்கள் நடத்தலாம். ஆனால் அதனைச் செய்வது பிரயோசனமற்றது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்குப் போகமாட்டோம் என நாம் ஒருபோதும் கூறவில்லை. நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்குப் போகமாட்டோம் என நாம் கூறவில்லை. ஆனால் நீங்கள் விசுவாசமாகப் பேச வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ன என்பது பற்றி எம்மிடம் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னரே தெரிவுக்குழு பற்றி நாம் யோசிப்போம். அது வரை நாம் தெரிவுக்குழுவுக்கு போகமாட் டோம். தமிழ்பேசும் மக்களும், அவர்களின் தலைவர்களும் நீண்டகாலமாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்கள். இனியும் தொடர்ந்து ஏமாற முடியாது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுதியான முடிவாகும்.

ஜனாதிபதிக்கும், எனக்கும் இடையில் நடந்த பேச்சின் அடிப்படையில்தான் நாம் பேசி வருகின்றோம். அரசுக்கும், எமக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை விபரங்களை நாம் எழுத்தில் பதிவு செய்து வைத்துள்ளோம். அதனை எவரும் மறுக்க முடியாது

பேச்சுக்கு வா பேச்சுக்கு வா என்று கேட்கின்றீர்கள். ஆனால் பேச்சுக்கு வந்தால் என்ன நடக்கிறது? நாட்டில் நல்லிணக்கம், புரிந்துணர்வு, சமத்துவம், நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு நியாயமான அரசியல்தீர்வு அத்தியாவசியம் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்துகிறது.

நிரந்தர சமாதானம் ஏற்பட மூன்று இனங்களாக சமத்து வமாக சமஉரிமை ஆட்சியுரிமை பெறக்கூடியவாறு தீர்வு அமைய வேண்டும். அது அரசியல் சாசனத்தில உள்ளடக்கப்பட வேண்டும்.

பேரினவாத சக்திகள் முன்னர் செய்த உடன்படிக்கைகளை நிறைவேற்றாது இருந்திருக்கின்றன. அதேநேரம் கிடைத்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்த நாம் தவறிவிட்டோம் என்று கூறுவதற்கும் இடமிருக்கிறது. ஆனால், பிரயோசனமற்ற அரசியற் தீர்வு எதனையும் நாம் ஏற்க முடியாது. தமிழ் மக்களுடைய எதிர்காலம் சிறப்பாக அமைவதை உறுதிசெய்யக் கூடிய கௌரவம், பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகியவற்றை உறுதி செய்யக்கூடிய ஒரு தீர்வு ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுமானால் அதனை நாம் இழக்கக்கூடாது.

இவ்வாறு கூட்டமைப்பின் தலைவர் தனதுரையில் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறீதரன், சுமந்திரன், விநோநோக ராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.யோகேஸ்வரன் மற்றும் தமிழரசுக் கட்சியின் இணைச் செயலாளர் சிவஞானம், வடக்கு,கிழக்கு மாகாண சபையின் முன்னாள் செயலர் பி.ரங்கராஜன், கொழும்பு சட்டபீடத்தைச் சேர்ந்த வி.ரி.தமிழ்மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## குடாநாட்டின்...

குடாநாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது போருக்குப் பின்னரான காலப்பகுதியில் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், வீதி அபிவிருத்தி, மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் எடுத்து விளக்கினார்.

எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பாகவும் இதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பாகவும் இதன்போது அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

இதனிடையே மத்திய கல்லூரியில் புதிதாக அமைக் கப்பட்டு இன்றையதினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்படவுள்ள நீச்சல் தடாகத்தைப் பார்வையிட்ட பிரதிநிதிகள் அமைச்சருக்கு தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

## வடமாகாண...

அதிகாரிகள் என அனைவரும் கலந்துகொள்ளவுள்ளனர்.


வடமாகாணத்தின் நிரந்தர அபிவிருத்தித் திட்டத்தில் அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படும் வகையில் இந்த அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் மற்றும் ஏனைய அபிவிருத்திப் பணிகள் குறித்தே இன்றைய தினம் முக்கியமாகக் கலந்துரையாடப்படவுள்ளது. இந்தக் கலந்துரையாடலை முடித்த பின்னர் இன்று மாலை ஜனாதிபதி கொழும்பு திரும்புகின்றார்.

## சவேந்திர...

பதவி வழங்கப்பட்டதன் காரணமாகவே இந்த நிலை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிய நாடுகளுக்கு இது குறித்து சட்டபூர்வமான கடப்பாடு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முத்தரப்பு ஒருநாள் தொடர் முதல்வெற்றி அவுஸ்ரேலியாவுக்கு



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்பு கிரிக்கெட் தொடரின் இந்திய-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நடை பெற்ற நேற்றைய முதலாவது போட்டியில் அவுஸ்ரேலிய அணி 65 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மெல்போர்னில் நடைபெற்ற இந்தப் போட்டி எட்டு ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் மழை காரணமாக சில மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தது. இதனையடுத்து 32 ஓவர்கள் வரை போட்டி மட்டுப்படுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 32 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுகளை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அவுஸ்ரேலிய அணி சார்பாக தனது முதலாவது போட்டியில் களமிறங்கிய மெத்தீவ் வாட் தனது கன்னி ஒரு நாள் அரை சதத்தை பூர்த்தி செய்து 67 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். மைக்கல் ஹசி 45 ஓட்டங்களையும், டேவிட் ஹசி ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி, சார்பாக வினய் குமார் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

217 என்ற வெற்றியிலக்கோடு துடுப்பெடுத்தாடிய இந்தி அணி 29.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று தோல்வியை தழுவிக் கொண்டது.

இந்திய துடுப்பாட்டத்தில் விராட் ஹோலி 31 ஓட்டங்களையும், தோனி 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். அவுஸ்ரேலிய பந்து வீச்சில் கிளன்ட் மெக்கேய் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வழி சமைத்தார்.

ஆட்டநாயகனாக கன்னி போட்டியில் அரைச் சதமடித்த மெத்தீவ் வாட் தெரிவானார்.இந்த தொடரின் அடுத்த போட்டி இலங்கை-இந்திய அணிகளுக்கிடையில் பேர்த்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# இங்கிலாந்து அணிக்கு 324 ஓட்ட இலக்கு



(டுபாய்)

பாகிஸ்தான் அணியுடனான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு 324 ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டுபாயில் நடைபெறும் இப்போட்டியில் பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 99 ஓட்டங்களையும் இங்கிலாந்து 141 ஓட்டங்களையும் பெற்றன. பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 365 ஓட்டங்களைப் பெற்றது.

போட்டியின் 2 ஆவது நாளான நேற்று முன்தினம் 115 ஓட்டங்களைப் பெற்றிருந்த யூனிஸ்கான் நேற்று 127 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதேவேளை, அஸார் அலி 157 ஓட்டங்களைப் பெற்றார். இது அவரின் இரண்டாவது டெஸ்ட் சதமாகும்.

யூனிஸ்கானும் அஸார் அலியும் சதம் குவித்தாலும் வேறு எவரும் அரைச்சதத்தையும் நெருங்கவில்லை. அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் 31 ஓட்டங்களைப் பெற்றார்.

இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில் மொன்டி பனேஸர் 124 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

வெற்றி பெறுவதற்கு 324 ஓட்டங்கள் தேவையான நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்று ஆட்டநேர முடிவின்போது விக் கெட் இழப்பின்றி 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. 3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரு போட்டிகளில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

## யாழ்.பட்டதாரிகளுக்கு...

அனுமதியினைக் கோரியுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றதும், யாழ்ப்பாண வளாக பட்டதாரிகளுக்கு அரச வேலை வாய்ப்பினை வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தவிர, யாழ்ப்பாண மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அதிக வட்டி...

டி சில்வா தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்திடம் குறைந்த வட்டிக்கு கடன் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் இருந்தபோதிலும், அரசாங்கம் கூடுதல் வட்டிக்கு கடன் பெற்றுக் கொள்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் வட்டி 3.1 வீதமாகும். எனினும், அரசாங்கம் 6.25 வீதமான வட்டிக்கு வர்த்தக வங்கிகளிடம் கடன் பெற்றுக்கொள்வதாக ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

## பிரிட்டனில்...

சந்தேகத்தின் பேரில் அதே பகுதியைச் சேர்ந்த 31 வயதான ஆண் ஒருவரை கைது செய்தனர். எனினும், விசாரணைகளின் பின்னர் குற்றச்சாட்டுகளின்றி அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

காணாமற்போன பெண்ணின் நலன் குறித்து தாம் பெரிதும் கவலை கொண்டுள்ளதாகவும், அவர் பற்றி தகவல் கிடைத்தால் உடன்தொடர்பு கொள்ளுமாறும் பிரித்தானிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வன்னிக்கு முழுமையான மின்சாரம் வவுனியாவில் உயர்மட்ட கலந்துரையாடல்



போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு இவ்வருடத்திற்குள் முழுமையாக மின்சாரத்தினை வழங்குவது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்றையதினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில் மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களுக்கு இயன்றவரை விரைவாக மின்சாரம் வழங்குவது தொடர்பாகவும் நடைமுறை ரீதியாக எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையில் ஆராயப்பட்டது.

மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களின் நிலைமைகள் தொடர்பாகவும் மக்களின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றார் இதன்போது இலவச மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் தற்போது இலங்கை மின்சார சபை அலுவலகங்களில் விநியோகிக்கப் படுவதாகவும் மக்கள் அதனை பெற்று பூரணப்படுத்தி வழங்குவதன் மூலம் இலவச மின் இணைப்பை பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எச்.எம் சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மின்வலு எரிச்க்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உணைஸ்பாருக் இலங்கை மின்சாரசபையின் மேலதிக பொது முகாமையாளர் ரஞ்சித் குணவர்த்தன, இலங்கை மின்சாரசபையின் யாழ். பிராந்திய பிரதி பொதுமுகாமையாளர் குணதிலக 'வடக்கின் வசந்த திட்ட முகாமையாளர் குணசீலன்' முல்லைமாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன் மற்றும் பிரதேச செயலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (29)

# மெய்வல்லுநர் போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் அருட்சகோதரி யோ.அனற்வலன்ரீனா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி பிரதம விருந்தினராகவும், சட்டத்தரணி சி.அன்ரன் புனிதநாயகம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு பங்குத்தந்தை அருட்திரு அ.பி.அன்ரனிப்பிள்ளை, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கந்ததாஸ குருக்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (04)

# தூக்கில் தொங்கிய நிலையில் முதியவரின் சடலம் மீட்பு

வடமராட்சி கரவெட்டி மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தூக்குப்போட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தர் கதிர்வேலு (வயது - 77) என்பவரே கழுத்தில் தூக்குப்போட்ட நிலையில் மீட்கப்பட்டவராவார்.

குறித்த இடத்திற்குச் சென்ற மரண விசாரணை அதிகாரி மற்றும் நெல்லியடிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டதுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காகச் சடலம் வைக்கப்பட்டுப் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (116)

# 12 வயது மாணவியைக் கடத்திய முன்னாள் இராணுவ வீரர் கைது

12 வயதான பாடசாலை மாணவியை ஒருவரைக் கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த் 31 ஆம் திகதி குறித்த மாணவி பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த போது முச்சக்கர வண்டியில் வந்த இந்த முன்னாள் படைவீரர் அவரைக் கடத்திச் சென்று ரத்தோட்டை பிரதேசத்திலுள்ள வனப் பிரதேசத்தில் தடுத்து வைத்துள்ளார்.

இந்தக் கடத்தல் தொடர்பான தகவல் மஹவெல பொலிஸாருக்குக் கிடைத்ததனையடுத்து குறிப்பிட்ட முச்சக்கர வண்டியின் உரிமையாளர், ஓட்டுநர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது குறித்த மாணவி தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது. இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் மாணவியை மீட்டதுடன் முன்னாள் இராணுவ வீரரையும் கைது செய்துள்ளனர்.

# பிரிட்டனில் சண்டித்தனம் இரு தமிழ் இளைஞருக்கு சிறை

பிரித்தானியாவின் Mitcham பகுதியில் இலங்கைத் தமிழருக்குச் சொந்தமான மினி சூப்பர் மார்க்கெற் ஒன்றுக்குள் புகுந்து நீண்ட காலமாக அட்டகாசம் செய்து வந்த இலங்கைத் தமிழ் இளைஞர்கள் இருவர் தலா மூன்று வருடங்களுக்கு சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆறு மாதங்களுக்கும் மேலாக இந்த மினி சூப்பர் மார்க்கெற்றுக்குள் புகுந்து பொருட்களை அடாவடித தனமாக எடுத்துச் செல்கின்றமையை தொடர் நடவடிக்கையாக கொண்டிருந்தனர்.

பொலிஸில் முறைப்பாடு செய்தால் கொலை செய்து விடுவோமென கடை உரிமையாளரை இவர்கள் மிரட்டி உள்ளனர்.

கடந்த வருடம் ஜனவரி 15 ஆம் திகதி மினி சூப்பர் மார்க்கெற்றில் வன்முறையிலும் ஈடுபட்டுள்ளனர். அந்நேரம் 10 வயது மகனுடன் உரிமையாளரின் மனைவி மினி சூப்பர் மார்க்கெற்றில் இருந்துள்ளார்.

இப்பையனின் முன்னிலையில் வைத்து தாயை அடித்து உதைத்து தரையில் சாய்த்தனர். கடையில் வேலை செய்கின்ற இளைஞன் ஒருவரின் தலையில் சாராயப் போத்தலால் தாக்கினர்.


பின்னர் சண்டியர்கள் இருவரும் வெளியில் சென்றபோதிலும் மெர்ரன் பொலிஸாரிடம் எதிர் பாராதவிதமாகப் பிடிபட்டனர். பொலிஸார் வேறு குற்றச் செயல ஒன்றை விசாரிக்க வந்திருந்த போது இவர்கள் வசமாக மாட்டுப்பட்டு விட்டனர்.



இவர்களுக்கு எதிராக Kingston Crown நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெற்று சாட்சிகள் மற்றும் சான்றுகள் மூலம் குற்றவாளிகளாக காணப்பட்டனர். குறிப்பாக கடையில் பொருத்தப பட்டிருந்த பாதுகாப்புக் கமராவில் இவர்களின் சண்டித்தனங்கள் பதிவாகி இருந்தன. இவர்களுக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் பெயர் அ.செந்தி வே (வயது 31). மற்றவரின் பெய எஸ்.சுகுமார் (வயது 37) எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டு அபிவிருத்தி குறித்து ராஜதந்திரிகளுக்கு எடுத்துரைப்பு






(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு நேற்றையதினம் 60 பேர் கொண்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் குழுவினருக்கு குடாநாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆளுநர் மற்றும் அரச அதிபரால் எடுத்துரைக்கப்பட்டது.

யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் காணொலி மூலம் இக்குழுவினருக்கு குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் விரிவாக விளக்கப்பட்டன.

வடக்கில் பொருளாதார ரீதியில் முன்னேற்றங்கள் கண்டபோதிலும் அரசியல் ரீதியில் முன்னேற்றம் காணப்படவில்லை எனவும் மிதிவெடிகள் எப்போது முற்றுமுழுதாக அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியேற்றப்படுவார்கள் எனவும் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே எவ்வாறான தொடர்புகள் காணப்படுகின்றன என்பது தொடர்பாகவும் இராஜதந்திரிகள் விளக்கங்களைக் கேட்டனர்.

இதற்கு வடமாகாண ஆளுநர் பதிலளிக்கையில் யாருடைய இடர்பாடுகளும் இன்றி மீள்குடியேற்றம் நடைபெற்று வருகின்றது. வடபகுதியில் மீள்குடியேறிய பகுதியில் பாடசாலைகள் கட்டப்பட்டும், மீள் நிர்மானிக்கப்பட்டும் வருகின்றது.

1835 பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு முடிவடைந்துள்ளன. இன்னும் 101 பாடசாலைகள் மட்டுமே மீள் திருத்தம் செய்யப்படவேண்டியுள்ளது. 1535 முன்பள்ளிகள் இயங்குகின்றன. 2685 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் கொடுக்கப்பட்டு மழலைக் கல்வித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. வீதிகள் 790 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

வடபகுதியில் 3 பாரிய கைத்தொழில் சாலைகள் இயங்கவுள்ளன. இதனால் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளன. யுத்தத்திற்குப் பிறகு மிதிவெடி அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். முகமாலைப் பகுதியில் அதிகமான மிதிவெடிகள் புதைக்கப் பட்டுள்ளன. அவற்றை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றார்.

இச் சந்திப்பில் வடமாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் உட்பட பல முக்கிய அதிகாரிகள் கலந்துகொண்டனர். (எஸ்)

# சாந்தகப்பையால் வெட்டு; மருத்துவமனையில் மனைவி

கணவனால் சாந்தகப்பையால் வெட்டப்பட்ட மனைவி யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை சென்று வருகின்றார். கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் நேற்று மதியம் 3.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ர.ஜீவகுமாரி (வயது - 40) என்பவரே வயிற்றுப் பகுதி மற்றும் கையில் வெட்டப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியக் குருக்கள் சுவாமிநாதன் (சுக்கர்)

சுப்பிரமணியக் குருக்கள் - செம்பெற்சோதி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரன் சுவாமிநாதன் (சுக்கர்) நேற்றுக் காலமானார்.

அன்னார் மனோன்மணி, நளாயினி, செல்வமுத்துக்குமரன், வைத்தியநாதன் ஆகியோரின் சகோதரரும், விநாயகமூர்த்தி குருக்கள் (மானிப்பாய்) , சற்குருநாதன் சிவாஜினி, அமுதினி ஆகியோரின் மைத்துனரும், ஆதித்தியன், ஆருரன், ஆகியோரின் பெரியப்பாவும், கஜானந்தன், மதிமுகன், வாமனேசன், வினோஜா, வித்தியா, யோகினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் மஞ்சத்தடியில் அமைந்துள்ள அன்னாரின் வீட்டில் இன்று (06.02.2012) முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மஞ்சத்தடி, இணுவில். (C/150) குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.